Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-65 ஆனி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00



## பௌத்த பெருந்தேசியவாதத்தை கையாள்வதற்கு ஒருங்கிணைந்த அரசியலே தமிழர்களிடம் தேவை

- குருந்தூர் 1956 இற்கான ஓர் ஒருபாதை
- தமிழ் தேசிய அரசியலும் தமிழ் ஊடகங்களின் வகிபாகமும்
- கிளிநொச்சியில் வெற்றிகரமாக கம்பு பயிரிடும் முன்னோடி விவசாயி

ஆய்வு–அறிவு–நிமிர்வு

# கிளிநொச்சியில் வெற்றிகரமாக கம்பு பயிரிடும் முன்னோடி விவசாயி




தொகுப்பு - அமுது

2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருந்தது. சிறுதானியங்களின் பயன்பாடுகளை மக்கள் மத்தியில் ஊக்குவித்து 2030 ஆம் ஆண்டுக்குள் உலகளவில் உணவின்றி பசியால் வாடும் மக்களே இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது ஐ.நாவின் நீடித்த வளர்ச்சிகளில் ஒன்றாக பார்க்கப்படுகின்றது. ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களின் உற்பத்தியையும் பயன்பாட்டையும் மக்கள் மத்தியில் ஊக்குவிப்பதன் மூலமே மேற்படி இலக்கு சாத்தியமாகும்.

அந்தவகையில், உலகளவில் வறண்ட வலயங்களிலும் அதிகம் பயிரிடப்படும் சிறுதானியத்தில் கம்பு ஆறாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் மிக அதிகளவில் பயிரிடப்படும் தானிய வகையாக கம்பு விளங்குகின்றது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் 50 கோடிக்கும் அதிகமானோரின் பிரதான ஊட்டச்சத்து மூலங்களாக சிறுதானியங்களே காணப்படுகின்றன.

ஈழத்தில் புலிகளின் காலத்தில் பொருண்மியம் துறையினரால் வன்னிப் பிராந்தியத்தில் வறட்சியின் போது கம்பு அறிமுகப்படுத்தப்பட்டு பரந்துபட்ட அளவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடிகிறது. இதேபோல் குரக்கன், கம்பு உள்ளிட்ட தானியங்களைக் கொண்டு சிற்றுண்டி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் பத்திரிகை தகவல்கள் உண்டு.

2009 போர் முடிவுக்கு பின்னர் மீண்டும் விவசாய திணைக்களத்தினரால் கம்பு சிறுதானியம் விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் பெரிதாக பலரும் ஆர்வம் காட்டாத நிலையே தொடர்ந்தது. விவசாய திணைக்களங்களில் மட்டும் காட்சிப்பொருளாக இருந்த கம்பு சிறுதானியத்துக்கு சில விவசாயிகளே உயிர் கொடுத்தார்கள். அதில் முக்கியமானவர் கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வா நகரை சேர்ந்த மயில்வாகனம் இராஜகோபால் என்கிற முன்னோடி விவசாயி.

அவர் கம்பை பயிரிட்டு வெற்றிகரமாக அறுவடையும் செய்துள்ளார். சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத்தை முழு நேர தொழிலாக கொண்டுள்ள அவர் கம்பு சிறுதானிய பயிர்ச்செய்கை குறித்து கூறிய விடயங்கள் வருமாறு:

நாற்பது வருடங்களாக விவசாயத்துறையில் இருந்தாலும் கம்பை பற்றி பெரிதாக கேள்விப்படவில்லை. விவசாய திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தான் 5 கிராம் கம்பு விதையை தந்தார். அதனை நடுகை செய்து பார்ப்போம் என தொடங்கிய போதுதான் எனக்கு அதை தொடர்ச்சியாக பயிரிட வேண்டும் என்

கிற ஆர்வம் வந்தது. முதலில் விதையை போட்டு பின் அதிலிருந்து ஒரு கிலோ அளவான விதைகளை பெற்று பின்பு அதனை நாற்று மேடையில் போட்டு பின் அதனை ஒரு ஏக்கரில் நாட்டி ஐநூறு கிலோக்களுக்கு மேல் கம்பு தானியத்தை அறுவடையாக பெற்றிருந்தேன். தற்போது ஒரு கிலோ கம்பு தானியம் 600 ரூபாயிலிருந்து 800 ரூபா வரை போகின்றது. அதிலிருந்து நல்ல இலாபத்தை பெற்றிருந்தேன். அதற்கும் மேலாக, கம்பு நல்ல ஒரு ஆரோக்கியமான உணவு, எங்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமானது.

உணவுப்பொருள் உற்பத்தியில் பாரிய உற்பத்தி சவால்களை எதிர்நோக்கியுள்ள நேரத்தில், உணவுப் பாதுகாப்பு தொடர்பில் எல்லோரும் பேசிவரும் நேரத்தில் கம்பு போன்ற சிறுதானியங்கள் எம் மக்களின் வாழ்வுக்கு அத்தியாவசியமானது. இப்படியான சிறுதானிய இனங்களை நாங்கள் தேடித்தேடி பயிரிடுவதன் மூலம் ஏனைய விவசாயிகள் மத்தியிலும் இது தொடர்பில் விழிப்புணர்வை ஊட்ட முடியும். கம்பு தானியத்தை பயிர் செய்து அறுவடையை பெற்ற பின்பு தான் கம்பு மாவிலிருந்து என்னென்ன உணவுகள் தயாரிக்கலாம் என்பது தொடர்பில் அறிந்து வருகிறேன்.

எந்த ஒரு பயிரையும் நிலத்தை பண்படுத்தி விளைநிலமாக்கியதன் பின்பு தான் பயிரிட வேண்டும். பயிர்களுக்கான இடைவெளி, களைத்தாக்கம், பசளைகளை பயிர்களுக்கு வழங்குதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும். கம்பை பொறுத்தவரை பெரிதாக நோய்த்தாக்கங்கள் எதுவுமற்ற பயிர் என்றே சொல்லலாம். பயிர் செய்யும் போது பெரிதாக செலவும் இல்லாத பயிராக கம்பு உள்ளது. அறுவடையின் போது கம்பை கதிரில் இருந்து பிரித்தெடுக்கும் தொழில் நுட்பத்தை அறிந்து கொண்டால் அறுவடையும் சுலபமாகி விடும்.

குரக்கன் போன்ற சிறுதானியப் பயிர்களுக்கு மக்கள் மத்தியிலும் நல்ல கேள்வி உண்டு. இவற்றின் மூலம் பொருளாதார ரீதியாகவும் அதிகளவு பலன்களை பெற்றுக் கொள்ளலாம். அதேபோல குரக்கனையும்




நீண்டகாலமாக பயிரிட்டு வருகிறேன். ஒரு கிலோ குரக்கனை நாற்று போட்டு நட்டால் குறைந்தது 1500 கிலோ குரக்கனை அறுவடை செய்யக் கூடியதாக உள்ளது.

பொதுவாக நிலத்தை பண்படுத்தி சேதனப் பசளைகளை போட்டு பயிரிடுவதை போல சிறுதானியங்களையும் அடிக்கடி செய்து கொண்டு வந்தால் அந்த நிலம் நல்ல விளை நிலமாக மாறும். சாதாரண அரிசியை விடவும் எட்டு மடங்கு இரும்பு சத்து கம்பு தானியத்தில் உள்ளது. இரும்பு, புரதம், நார்ச்சத்து மற்றும் காபோவைதரேட்டுகள் போன்ற முக்கியமான ஊட்டச்சத்துக்களின் சிறந்த மூலமாகும். இதில் வைட்டமின் பி, கல்சியம் மற்றும் அத்தியாவசிய அமினோ அமிலங்கள் அதிகளவில் உள்ளன.

கம்பு தோசை, கம்பங் கூழ், கம்பு அடை, கம்பு இட்டலி, கம்பஞ் சோறு, கம்பு கஞ்சி, கம்பு உப்புமா, கம்பு களி, கம்பு லட்டு போன்ற பல உணவுகளை செய்ய முடியும். குறிப்பாக வளரும் குழந்தைகள், பெண்களுக்கு தேவையான பல்வேறு சத்துக்கள் இந்த கம்பு தானியத்தில் காணப்படுகின்றன. கம்பு தானியத்தை உண்பதன் மூலம் ஏராளம் மருத்துவ நன்மைகளும் உள்ளன. கம்பு போன்ற சிறுதானியங்களை முடிந்தளவு பல விவசாயிகள் பயிரிட முன்வர வேண்டும். அதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

# பொறுப்புக்கூறலை மீண்டும் வலியுறுத்திய ஐ.நா

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது அமர்வின் தொடக்க நிகழ்வில் இலங்கையின் நல்லிணக்கம், மனித உரிமைகள் நிலவரம், பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நடா அல் நஷிப் தெரிவித்துள்ள விடயங்கள் கவனத்தை ஈர்த்துள்ளன.

கடந்த கால மீறல்கள் குறித்து இலங்கை அதிகாரிகள், நம்பகமான விசாரணைகள் மற்றும் வழக்கு தொடுக்கும் செயற்பாடு உள்ளிட்ட ஏனைய பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இந்த பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாவிடின் அதில் பற்றாக்குறை இருக்கும் வரை சர்வதேச சமூகம் அதனை பூர்த்தி செய்வதற்கான பங்கை வகிக்க முடியும் என வாய்மூல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு பொறுப்புக்கூறலுக்கு முன்வராது நல்லிணக்கத்தையோ நிரந்தர சமாதானத்தையோ ஏற்படுத்த முடியாது என்பதையும் குறித்த அறிக்கை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. ஆனால் இப்போதும் தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. தொல்லியல் திணைக்களம் ஊடாக விகாரைகள் பெயரிலும் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு தீவிரமாக தொடர்ந்து வருகிறது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு இதுவரை உரிய நீதி வழங்கப்படவில்லை.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசும், அதன் சிங்கள பௌத்த கட்டமைப்பும் தான் இத்தீவில் தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வை வழங்க முடியாமைக்கான காரணங்களாகும். அவை தான் இறுதியில் 2009 இல் இனவழிப்பு போரில் முடிவடைய காரணமாக இருந்தன. உலக நடுவர்களாக விளங்கும் ஐ.நா போன்ற உயரிய நிறுவனங்கள் எங்களின் விடயங்கள் தொடர்பில் கையாளும் போது தமிழ் மக்களை தேசமாக ஏற்றுக் கொண்டு அதனடிப்படையில் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அப்படி செய்யாமல் வெறுமனே காட்டம், கண்டனம் என்ற வகையில் மாத்திரம் இருக்கும் வாய்ப்பேச்சுக்களாலும் அறிக்கைகளாலும் தமிழ் மக்களுக்கு ஒன்றும் வரப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் தெளிவாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்.

இந்த அறிக்கைகள் இலங்கையில் நடந்ததற்கு நீதி கோரும் சர்வதேச முற்போக்கு சக்திகளை சமாதானப்படுத்தவும், மேற்குலகுக்கு எதிராக சிறிலங்காவுக்கு ஆதரவு வழங்கும் நாடுகளுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க மட்டுமே பயன்படுகின்றன.

எதிர்காலத்தில் சிறிலங்கா அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படாமல் இருக்க வேண்டுமானால், மீள நிகழாமையை உறுதிப்படுத்த உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக்கூறல் செயன்முறை உரிய வகையில் நிறைவேற்றப்பட வேண்டும். இவையெல்லாவற்றையும் தாண்டி அடிப்படையில் மாற்றம் நிகழ வேண்டுமெனில் சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். அதற்காக பொருளாதாரத்தடை உட்பட உரிய நெருக்குதல்களை சர்வதேசம் சிறிலங்கா அரசுக்கு கொடுக்க வேண்டும். அதன் பின்னரே இந்த அறிக்கைகளுக்கு அர்த்தம் இருக்கும்.

-செ. கிரிசாந்-

# பௌத்த பெருந்தேசியவாதத்தை கையாள்வதற்கு ஒருங்கிணைந்த அரசியலே தமிழர்களிடம் தேவை



சி.அ.யோதிலிங்கம்

கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டு அடுத்தநாளே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமிழரசு கட்சி பிரதிநிதிகளை கூப்பிட்டு கலந்துரையாடல் நடாத்தி இருக்கின்றார். அதுவும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனும் தள்ளாத வயதில் கூட அந்த கலந்துரையாடலில் பங்குபற்றி இருக்கின்றார். பிரதானமாக அங்கு பேசப்பட்ட விடயம் தொல்லியல் திணைக்களத்தினுடைய ஆக்கிரமிப்பு சம்பந்தமானது. தொல்லியல் திணைக்களத்தினுடைய தலைவரும் அதில் கலந்து கொண்டிருக்கின்றார். அதில் தமிழ் அரசியல் தலைவர்கள் வடக்கு கிழக்கில் நடக்கின்ற தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகளை வெளிப்படுத்தி உள்ளார்கள். இது ஜனாதிபதி ரணிலுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலைமையை உருவாக்கியது.

தொல்லியல் திணைக்களத்திற்கான நிதி அரசாங்கத்திற்கான வரவு செலவு திட்டத்திலிருந்து மட்டும் போவதில்லை. அரசாங்க வரவு செலவு திட்டத்திலிருந்து போகின்ற நிதி விகாரைகளை எல்லாம் கட்டுவதற்கு போதுமானதாக இல்லை. அவர்களுக்கு வெளியில் எங்கையோ இருந்து நிதி வருகின்றது. அதை அவர்களே கூறி இருக்கின்றார்கள், இந்த விகாரைகள் கட்டுவதற்கான செலவுகள் அனைத்தையும் நாங்கள் வெளியில் இருந்து தான் பெற்றுக் கொள்கிறோம் என்று. ஏற்கனவே அதற்கு ரணில் கண்டனம் தெரிவித்திருந்தார். ஒரு அரசாங்க திணைக்களம் வெளியிலிருந்து நிதியை பெற்று செலவிட முடியாது, ஆகவே இதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். ஆனால் அதற்கு அடுத்த நாளே மகா நாயக்க தேரர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு ரணிலுக்கு வந்தது. வெளியில் இருந்து வருகின்ற நிதியை நிறுத்த வேண்டாம் என்று ரணிலுக்கு ஒரு கடிதத்தையும் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

ஒரு அரசாங்கத்தினது ஒழுங்கு விதிகளுக்குள் செயற்படுகின்ற திணைக்களமாக இல்லாமல் தனித்து செயற்படுகின்ற திணைக்களமாக தான் இன்றைக்கு தொல்லியல் திணைக்களம் இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன். அதற்கென்று ஒரு விரிவான திட்டமொன்று இருக்கிறது. அந்த நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் தான் அவர்கள் செயற்படுகிறார்கள். அந்த விரிவான திட்டம் என்பது பௌத்த மதத்தை ஒரு ஆக்கிரமிப்பு கருவியாக பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியிலே ஒரு வகையான இன அழிப்பை செய்வது. ஒரு இனத்தை அழிப்பது என்றால் மொழியை அழித்தல், பொருளாதார

த்தை அழித்தல், கலாசாரத்தை அழித்தல், நிலத்தை பறித்தல் என்பவற்றை பிரதானமாக உள்ளடக்கும். தொல்லியல் திணைக்களம் செய்வது ஒரு கலாசாரத்தை அழிப்பதான செயற்பாடு தான். பௌத்த விகாரைகளை கட்டுவது என்ற விடயம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து பாரிய எதிர்ப்பு வரக்கூடியதான ஒரு சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது.

தமிழ் மக்களினுடைய விவகாரம் சர்வதேச மயப்பட்டு இருக்கின்ற ஒரு சூழலில் இதற்கு ஏதோ ஒரு வகையில் பதில் வழங்க வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. ஜனாதிபதிக்கு அந்த பொறுப்பு இன்றைக்கு வந்திருக்கிறது. இந்த விவகாரத்தை நொதிக்க செய்தவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தான். தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் இந்த விவகாரத்தை ஒரு வலுவாக நொதிக்க செய்து அதை உலக மட்டத்தில் பேசுபொருளாக்கியதில் அவர்களுடைய பாத்திரம் என்பது மிகவும் உயர்வானதாக இருந்தது. இதை ஏதோ ஒருவகையில் சமரசம் செய்ய வேண்டிய தேவையும் அதேவேளை சமரசம் செய்வதன் ஊடாக இங்கே தமிழ் தேசிய மக்கள் முன்னணி மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் வெளியில் பிரச்சாரமாகாமல் தடுக்க வேண்டிய ஒரு தேவையும் ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதன் பிறகும் முக்கியமான மூன்று உறுப்பினர்கள் விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனுடைய நோக்கம் என்னவென்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய செயற்பாட்டு எல்லையை அவர்களுக்கு புரிய வைப்பது தான். அதாவது இதற்கு மேலே நீங்கள் போவீர்கள் என்றால் தலைவர்கள் என்றும் பார்க்காமல் நாங்கள் அவர்களை கைது செய்ய தயாராக இருக்கிறோம் என்கின்ற செய்தி ஒன்றை தான் அரசாங்கம் இதற்குள்ளால் சொல்ல வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய அந்த செயற்பாடுகளை ஏதோ ஒருவகையில் முடக்க வேண்டுமென்றால், இந்த பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்பாக

> **இங்கே ஒரு தமிழ் பௌத்தம் இருக்கின்றது என்பதையும் ரணில் ஏற்றுக்கொண்டிருக்கிறார் தமிழ் பௌத்தம் இருக்கிறது என்றால் சிங்கள பௌத்த அடையாளங்களை இங்கே கொண்டுவர முடியாது**

தானே ஏதாவது செய்கிறேன் என்று வெளிக்காட்ட வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் ரணில் விக்கிரமசிங்க இந்த நிலைமையை எடுத்திருக்கின்றார் என்று நான் நினைக்கிறேன்.

“இந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் உடனடியாக நிறுத்த வேண்டும். நீங்கள் 250 ஏக்கர் எடுக்கிறீர்கள் என்றால் மகா விகாரை கட்ட போகிறீர்களா? உங்களுக்கு வரலாறு தெரியாதா?” என்று கேட்டிருக்கிறார். அதுவும் இல்லாமல் இங்கே ஒரு தமிழ் பௌத்தம் இருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதுதான் மிக முக்கியமான விடயம். தமிழ் பௌத்தம் இருக்கிறது என்றால் சிங்கள பௌத்த அடையாளங்களை இங்கே கொண்டுவர முடியாது. உடனடியாகவே தொல்லியல் திணைக்கள தலைவர் தன்னுடைய இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு கொடுத்திருக்கின்றார். முன்னர் என்றால் தொல்லியல் திணைக்கள தலைவர் இராஜினாமா கடிதத்தை கொடுத்தார் என்றால் சிங்கள சமூகங்கள் எழுச்சி அடைந்து விடும். ஆனால் இந்த தடவை அவ்வளவு பெரிய எழுச்சியை காணவில்லை. கண்டனம் தெரிவித்த கட்சிகளில் கூட விமல் வீரவன்சவின் கட்சியை தவிர வேற கட்சிகள் எதுவும் பெரிதாக கண்டனம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் இன்று அங்குள்ள சூழல் வித்தியாசமானதாக உள்ளது. அங்கு வேறுவகையான நெருக்கடிகள் வந்து கொண்டிருப்பதை நாங்கள் பார்க்க கூடியதாக இருக்கின்றது.

(09ஆம் பக்கம் பார்க்கவும்)


# தமிழ் மக்கள் கோரும் பொதுவாக்கெடுப்பு

## – பகுதி 4

இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆண்டு மாசி மாதம் நடந்த "வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி" பேரணியின் இறுதிப் பிரகடனத்தில் பொது வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பொது வாக்கெடுப்பு சாத்தியமா என்ற கேள்வியை பலரும் எழுப்பியிருந்தனர். சிலர் இந்த பொது வாக்கெடுப்பு என்பதே ஒரு மேற்குலக கருத்தியல் என்றும் அதனை இலங்கைக்குப் பொருத்திப் பார்க்க முடியாது என்றும் வாதிட்டனர். மேலும் ஒரு சிலர் பொதுவாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு யாரை நோக்கி கோரிக்கை வைப்பது என்ற கேள்வியை முன்வைத்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மற்றைய நாடுகளில் நடந்த பொதுவாக்கெடுப்பு தொடர்பாக முன்னைய இதழ்களில் பார்த்தோம். குறிப்பாக தென் சூடானில் நடந்த அந்த நாட்டின் விடுதலைக்கு வழிவகுத்த பொதுவாக்கெடுப்பு பற்றி சித்திரை மாத இதழில் பார்த்தோம். ஸ்பெயின் நாட்டில் கடலோனிய மக்கள் தமது விடுதலை வேண்டி நடத்திய பொதுவாக்கெடுப்பு பற்றி சென்ற இதழில் பார்த்தோம். ஒப்பீட்டளவில் அதிகளவு சுயாட்சி அதிகாரத்தை வைத்திருந்த கடலோனிய அரசாங்கம் தன்னிச்சையாக ஏற்பாடு செய்த பொதுவாக்கெடுப்பு எவ்வாறு அதனைச் சூழ இருந்த ஏனைய அரசாங்கங்களின் ஆதரவு இன்றி தோற்கடிக்கப்பட்டது என்று பார்த்தோம். ஸ்பெயினின் மத்திய அரசாங்கம் எவ்வாறு பொதுவாக்கெடுப்பை நசுக்கியது என்றும் பார்த்தோம்.

தென் சூடானைப் பொறுத்தவரை பொது வாக்கெடுப்பை சாத்தியமாக்கியது அங்கு நடந்த விடுதலைப் போர். கடலோனியாவைப் பொறுத்தவரை பொதுவாக்கெடுப்புக்கான முன்னெடுப்புகள் செய்வதை சாத்தியமாக்கியது அங்கிருந்த சுயாட்சி அரசாங்கம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த இரண்டுமே இன்று இல்லை. ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டது. ஈழத்தமிழ் மக்களின் ஒரு



தொகுப்பு - லிங்கம்

குறைந்தபட்ச சுயாட்சி அலகு என்ற கருதப்பட்டிருக்கக்கூடிய மாகாண சபைகள் கூட எம்மிடம் இல்லை. இவ்வாறு இருக்கையில் பொதுவாக்கெடுப்பு ஒன்று தற்பொழுது சாத்தியமில்லை என்பது உண்மைதான்.

ஈழத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்ளும் எவரும் அம்மக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானிப்பதற்கு உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்த தீர்மானத்தை எடுப்பதற்கு பொதுவாக்கெடுப்பு ஒன்றுதான் அவர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு ஜனநாயக வழி. அந்த ஜனநாயக வழியை, அவர்களது உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று எல்லா ஜனநாயக சக்திகளையும் நோக்கி கோரிக்கையாக வைக்க வேண்டும். முக்கியமாக இந்தக் கோரிக்கை சிங்கள ஜனநாயக சக்திகளை நோக்கி வைக்கப்பட வேண்டும். கடலோனியாவின் பொதுவாக்கெடுப்பை அதன் சகோதர இனங்கள் ஏற்றுக் கொள்ளாமல் போனதே அதன் தோல்விக்கு முக்கிய காரணமாகியது. அதனை ஒரு பாடமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிங்கள ஜனநாயக சக்திகள் இதனை ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வி எழுவது இயல்பு. சிறிலங்காவில் ஏற்பட்ட பொருளாதார

நெருக்கடியும் அதனைத் தொடர்ந்து வந்த அரகலய போராட்டமும் தமிழ் மக்களின் நியாயமான ஜனநாயக உரிமைகளை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு வெளியைத் திறந்து விட்டுள்ளது. அந்த வெளியை விரைவாக மூடுவதற்காகவே சிங்கள பௌத்த இனவாத அரசு விகாரைகளை கட்டுவது போன்ற இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. அதனை முறியடித்து சிங்கள ஜனநாயக சக்திகளை தமிழ் மக்களுக்கு ஆதரவாக திரட்டும் செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.

அடுத்து இந்த பொதுவாக்கெடுப்பு சட்டபூர்வமானதாக அமைய முடியுமா என்ற கேள்வி இருக்கிறது. சிங்கள பௌத்த இனவாத அரசைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையும் சட்டபூர்வமற்றதாகத் தான் இருக்கும். ஆனால், அவ்வாறான நிலைமையிலும் நாம் இன்றும் போராடிக் கொண்டுதான் இருக்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கைது செய்யப்படுகிறார்கள். அதற்காக எமது இனத்துக்கு சரியானதை நாம் செய்யாமல் இருப்பது எமது இனத்தை அழிவுப் பாதைக்குத் தான் இட்டுச் செல்லும்.

ஈழத்தமிழர் கோரும் பொதுவாக்கெடுப்பு தொடர்பாக கடலோனியாவில் நடந்த பொதுவாக்கெடுப்பில் இருந்து பல சாதகமான பாடங்களையும் நாம் பெற்றுக் கொள்ளலாம். முதலாவது, இந்த பொதுவாக்கெடுப்பை நடத்தக் கூடிய உள்ளூராட்சி அலகுகள் எம்மிடம் இன்னமும் இருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவான கட்சிகளின் கைகளிலே இருக்கின்றன. அவை சிங்கள பௌத்தத்திற்கு ஆதரவான கட்சிகளின் கைகளுக்குப் போய்விடாமல் பாதுகாப்பது பொதுவாக்கெடுப்பை நோக்கி நாங்கள் எடுக்க வேண்டிய முதலாவது நடவடிக்கை.

இரண்டாவது, பொதுவாக்கெடுப்பை நடத்துவதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை என்பது. கடலோனியாவைப் பொறுத்தவரை அவர்களுக்குத் தேவைப்பட்டது மத்திய அரசாங்கத்தின் தடைகளை மீறி செயற்படத் துணிந்த அரசியற் தலைமை ஒன்று. அவ்வாறான தலைமை ஒன்று ஈழத்தமிழர் மத்தியில் தற்பொழுது இல்லை என்பது யதார்த்தமாக இருந்தாலும் அவ்வாறான தலைமை ஒன்றை உருவாக்க வேண்டியது ஈழத்தமிழரின் கடமையாக தற்பொழுது இருக்கின்றது. தேசத்தின் பக்கம் நிற்கின்ற தலைமையை தெரிவு செய்து அதனைச் சுற்றி வலுச் சேர்ப்பது உடனடியாக செய்யப்பட வேண்டிய ஒன்று. தேர்தல் அரசியலில் இருந்து கொண்டு கட்சிகளை வளர்க்கும் நோக்கத்தை கொண்ட இன்றைய அரசியற் தலைவர்களை தவிர்த்து விட்டு தேசத்தில் பற்றுறுதி கொண்ட தலைமையை தேட வேண்டும்.

“ தேர்தல் அரசியலில் இருந்து கொண்டு கட்சிகளை வளர்க்கும் நோக்கத்தை கொண்ட இன்றைய அரசியற் தலைவர்களை தவிர்த்து விட்டு தேசத்தில் பற்றுறுதி கொண்ட தலைமையை தேட வேண்டும் ”

மூன்றாவது, மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளை மீறி செயற்பட முற்படுபவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளை ஏற்பாடு செய்வது. இந்த பாதுகாப்பு அவர்களுக்கு வேண்டிய சட்ட உதவிகளை செய்வது, அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வேண்டிய பொருளாதாரங்களை உறுதி செய்வது, போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

நான்காவது, கடலோனியாவைப் பொறுத்தவரை அவர்களுக்கு என்று ஓர் அரசாங்கம் இருந்தது. ஈழத்தமிழருக்கோ இருந்த மாகாணசபைகள் கூட இன்று இல்லை. அந்தவகையில் ஒரு பொதுவாக்கெடுப்பை ஒன்றிணைத்து நடத்துவதற்கான ஒரு சாதனம் எம்மிடம் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதே வேளை கடலோனியா செய்தது போன்று பொதுவாக்கெடுப்புக்கான வேலைகள் மேலிருந்து கீழாகத் தான் வர வேண்டும் என்பதில்லை. இந்த வேலைகள் கீழிருந்து மேலாகச் செய்யப்படலாம். உதாரணமாக, கடலோனியாவில் கூட அவ்வப்போது நூற்றுக்கணக்கான உள்ளூர்

பொதுவாக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. அவை சட்ட ரீதியாக கட்டுப்படுத்தப்படாதவை (non-binding). அவ்வாறான வாக்கெடுப்புகளை கிராம மட்டங்களில் செய்ய முடியும்.

உண்மையில் அது மக்களின் பங்குபற்று தலை அதிகரிக்கும், அதேவேளை ஜனநாயகத் துக்கும் வலு சேர்க்கும். எம் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் இருக்கின்றன, விளை யாட்டுக் கழகங்கள் இருக்கின்றன, பல கிராமங் களை ஒன்றிணைக்கும் மாதர் சங்கங்கள் இருக் கின்றன, கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன, இவை எல்லாவற்றுக்கும் மேலாக வெகுசன அமைப்புகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் தொடர்புபடுத்தி ஒன்றிணைத்து கிராமம் கிராம மாக, குறிச்சி குறிச்சியாக, நகர் நகராக ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்தி முடிக்கக் கூடிய பலம் எம்மிடம் இருக்கிறது. இதனை நோக்கி நாம் முயற்சிகளை எடுக்காமல் இருப்பது தான் எம்மிடம் இருக்கும் பலவீனம்.

தென்சூடானில் தனிநாடு ஒன்று உருவாக வழிவகுத்த பொதுவாக்கெடுப்புக்கான சூழல் எமது நாட்டில் எட்டப்படவே இல்லை. கடலோனி யாவில் தனிநாடு ஒன்று உருவாக வழிவகுத் திருக்க வேண்டிய பொதுவாக்கெடுப்பு போன்ற ஒன்றை நடத்தக் கூடிய சூழல் மாகாணசபைகள் இருந்த காலத்தில் ஈழத்தில் சாத்தியப்பட்டி ருக்கலாம். மாகாணசபைகளை வைத்திருந்த அர சியற் தலைமைகள் அதனைச் செய்திருக்குமா என்பது வேறு விடயம். மொத்தத்தில் தென் சூடான் வழியும் கடலோனியாவின் வழியும் எமக்கு இன்றைய கால கட்டத்தில் சாத்திய மற்றவை. எல்லாவற்றுக்கும் மேலாக வெளிநாடு ஒன்றில் நடந்த அனுபவத்தை எமது நாட்டில் அப்படியே பொருத்திப் பார்க்க முடியாது. ஆனால் அவற்றிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு புதிய வழிகளை நாம் தேட முடியும். எமது நாட்டுக்கு பொருந்தக் கூடிய எமது சூழ லுக்குப் பொருந்தக் கூடிய வழிகளை தேட வேண்டும். அந்த புதிய வழிகளில் ஒன்றாக நாம் மேலே கோடிட்டுக் காட்டியிருக்கும் கீழி ருந்து மேல் நோக்கிய வாக்கெடுப்பு முயற்சி அமைய முடியும். அந்த முயற்சி வெற்றி பெற வேண்டுமானால் அந்த முயற்சியில் ஈடுபடுவத ற்குரிய அரசியல் மனோபலமும் தேசத்துக்கான அர்ப்பணிப்பும் உள்ள தலைமை அவசியமா னது. அதேவேளை அந்தத் தலைமையினதும் பொதுவாக்கெடுப்பில் கடமையாற்ற முற்படுபவர் களினதும் சட்ட ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய ஒரு கட்டமைப்பும் இன்றியமையாதது.

---

(06ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த பௌத்த ஆக்கிரமிப்பை ஒரு கருவியாக பயன்படுத்தி அவர்கள் செய்கின்ற செயற்பாட்டை நிறுத்துவதற்கு தொடர்ச்சியான ஒரு செயற்பாட்டை நாங்கள் முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஒரு பக்கத்தில் மக்களை இணைத்த போராட்டமாக இருக்கின்ற அதே வேளையில் இன்னொரு பக்கத்தில் அரசியல் ரீதியான செயற்பாடுகள் ஊடாகவும் அரசாங்கத் திற்கு அழுத்தம் கொடுப்பதாக இந்த செயற்பாடு இருக்க வேண்டும். இன்றைக்கு தமிழ் மக்களி னுடைய அரசியல் விவகாரம், அவர்கள் மேதான இந்த ஆக்கிரமிப்பு விவகாரம் எல்லாம் சர்வதேச மயப்பட்டு இருக்கிற ஒரு சூழலில் அரசாங்கத்திற்கு நிச்சயமாக அழுத்தங்கள் வரும். அந்த அழுத்தங்கள் வருகின்ற பொழுது அந்த அழுத்தங்களை கவனமாக பயன்படுத்த கூடிய சூழலில் நாங்கள் இருக்க வேண்டும். நாங் கள் இந்த விடயத்தை ஒருங்கிணைந்த செயற் பாட்டுக்குள்ளால் முன்னெடுக்கின்ற போது தான் எங்களால் இதில் முன்னேற்றங்களை காண முடியும் என்று நான் நினைக்கிறேன்.

கடைசியாக நாங்கள் எங்கு வந்து முடி வோம் என்றால் ‘ஒரு ஒருங்கிணைந்த செயற் பாடு’ என்பதற்குள் தான் நாங்கள் முடிவுக்கு வர வேண்டிய ஒரு தேவை இன்றைக்கு இருக்கிறது. நான் அடிக்கடி சொல்கின்ற இரண்டு விடயங்களில் ஒன்று பௌத்த பெருந்தேசியவாதத்தை கையாளு கிற போது ஒருங்கிணைந்த அரசியல் தேவை என்பது, மற்றையது சர்வதேச அரசியலை கையா ளுகின்ற போது எங்களுக்கு ஒருங்கிணைந்த அரசியல் தேவை என்பது. நீங்கள் தேர்தல் நேரங்களில் எல்லாம் கட்சி அரசியலில் சண்டை பிடியுங்கள், குழு வாதங்களை செய்யுங்கள். ஆனால் இந்த விவகாரம் தமிழ் மக்களின் இருப்பு சம்பந்தமானது. ஆகவே இருப்பு சம்பந்தமான விவகாரங்களை கையாளுகிற போது ஒரு ஒருங் கிணைந்த அரசியலை கட்டி எழுப்ப வேண்டிய தேவை, ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை கட்டி எழுப்ப வேண்டிய தேவை அவசியமாக இருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

# குருந்தூர் : 1956 இற்கான ஓர் ஓடுபாதை




ஆங்கிலத்தில் திசரானி குணசேகர (www.groundviews.org) தமிழாக்கம் : நிமிர்வு

**முகவுரை**

குருந்தூர் மலையில் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி, இராணுவத்தின் பாதுகாப்புடன் தொல்லியல் திணைக்களத்தால் கட்டப்பட்ட விகாரை தமிழ் தேசத்தின் மீதான அடக்கு முறைகளின் ஒரு சின்னமாக இருக்கின்றது. இதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை அப்பகுதி மக்களும் அரசியற் கட்சிகளும் தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். இந்தப் பின்னணியில் குருந்தூர் விகாரைக்கு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையில் புத்த பிக்குகளும் இனவாதிகளும் கடந்த 21 ஆம் திகதி வருகை தந்துள்ளனர். இந்த வருகையின் நோக்கம் அரகலய காலத்தில் சிறிது பின்தள்ளப்பட்டிருந்த சிங்கள-பௌத்த இனவாதத்தை மீண்டும் ஒரு பலம் மிக்க அரசியல் சக்தியாக நிறுவிக் கொள்வதே என்று கட்டுரையாளர் திசரானி குணசேகர Kurundi: A Runway to'56 என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார். மேலும் இந்த இனவாதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் நல்ல நடவடிக்கைகளை சீர்குலைக்க முற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கின்றார்.

இந்தக் கட்டுரையாளரின் சிங்கள-பௌத்த இனவாதிகள் தொடர்பான கணிப்பு ஏற்புடையதே என்றாலும் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அவருக்கு இருக்கும் கருத்து ஏற்புடையதல்ல. இன்றைய பொருளாதார நெருக்கடிகளினால் இருக்கும் சர்வதேச அழுத்தங்களே ஜனாதிபதியை இவ்வாறு பேச வைக்கின்றன. இதே ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறைகளை ஒருவரும் மறக்க முடியாது. அந்தப் பின்னணியில் தான் ஜனாதிபதியின் இன்றைய கூற்றுகளை பார்க்க வேண்டும். மேலும் சிங்கள-பௌத்த இனவாதத்துக்கு எதிராக கதைத்த சிங்கள முற்போக்குவாதிகளை சிறையில் அடைத்ததும், பயங்கரவாத தடைச் சட்டத்திலும் விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வர நினைப்பதும் இந்த ஜனாதிபதி தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் இந்த ஓரிரண்டு வார்த்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு ஏமாந்துவிடக் கூடாது.

மேலும் பாரம்பரியமாக குருந்தூர் மலை என்று அறியப்பட்ட இப்பிரதேசத்தை 'குருந்தி'

என்று சிங்களப் பெயர் கொண்டு அழைப்பதன் மூலம் அந்தப் பெயரை வழக்கப்படுத்த (norm alize) நினைக்கும் சிங்கள இனவாதிகளின் செயலுக்கு கட்டுரையாளரும் துணை போய் விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. ‘குருந்தி’ என்று குருந்தூர் மலையை அழைப்பது வடக்கு கிழக்கில் இன்று நடக்கும் சிங்களமய மாக்கலின் ஒரு அங்கமாகத்தான் பார்க்கப்பட வேண்டும். திசரானி குணசேகரவில் Kurundi: A Runway to’56 என்ற கட்டுரையின் தமிழாக் கத்தை கீழே தருகிறோம்.

**கட்டுரை**

கிரேக்க புராணக்கதையில் வீரன் ஹெராக்கிள்ஸ் (Heracles) இற்கு விதிக்கப்பட்ட 12 கடமைகளில் ஐந்தாவது கடமை ஆஜியஸ் (Augeas) மன்னனின் புனிதமான கால்நடைகள் இருந்த அசுத்தமான லயத்தை சுத்தம் செய்வது ஆகும். அல்.ஃ.பியஸ் (Alpheus) மற்றும் பெனியஸ் (Peneus) நதிகளை திசை திருப்பி அந்த லயத்தினூடாக பாயச் செய்வதன் மூலம் அதனை அவர் நிறைவேற்றினார். அதேபோன்றே அரகலயவும் அதன் இலட்சியவாத நீரைக் கொண்டு இலங்கை சமூகத்தில் ஆழப்பதிந்து இருந்த தீவிரவாத அழுக்குகளை கழுவிவிடும் என்று பலர் நம்பினார்கள்.

ஆனால், குருந்தி மலையை சுற்றி அடிக்கும் புயலைப் பார்க்கும் பொழுது இன-மத வாதம் அழியவில்லை என்று தெரிகிறது. பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டமும் அதன் விளைவாக ராஜபக்சக்களுக்கு எதிராக ஏற்பட்ட வெறுப்பும் அதனை பின்தள்ளி வைத்திருந்தது. ஆல்பர்ட் காமுஸ் (Albert Camus) சொன்னதைப் போன்று சொல்வதென்றால், பேசிலஸ் (bacillus) கொள்ளை நோய்க்கிருமி மத ஸ்தலங்களிலும், அரசியல் அமைப்புகளின் இருண்ட மூலைகளிலும், கற்பனையாக புனையப்பட்ட வரலாறுகளிலும் மற்றும் கூட்டு நினைவுகளின் இருண்ட மூலைகளிலும் தூங்கிக் கொண்டிருந்தது. எலிகளை எழுப்புவதற்கு சரியான தருணம் வரும் வரை அது காத்திருந்தது. அந்த நேரம் இப்பொழுது வந்து விட்டது போலுள்ளது.

அரகலய கோட்டாபய ராஜபக்சவை ஓடத் துரத்திய ஒரு வருடத்திற்குள்ளாகவே, அவரது காவிக் கூட்டாளிகள் மீண்டும் வந்து விட்டார்கள். அதிகாரத்தில் ஒரு பங்குக்காகவும் ஒரு துண்டு நிலத்திற்காகவும் இந்த நாட்டுக்கு தீ வைக்கவும் தயாராக உள்ளனர். புத்தரின் காலத்தில் ஒரு மன்னருக்கு லஞ்சம் கொடுத்து கோவிலைக் கைப்பற்ற முயன்ற நிகண்டயர்களுடன் இன்றைய தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஏளனமாக ஒப்பிட்ட மெதகொட அபயதிஸ் தேரோவிலிருந்து சிங்கள ராவயவின் அக்மீமன தயாரத்ன தேரர் வரை எல்லோரும் அங்கு இருக்கிறார்கள்.

நகைச்சுவையாளர் நதாஷா எதிரிசூரிய மற்றும் புருனோ திவாகரா ஆகியோரை வெற்றிகரமாக சிறையில் தள்ளியதன் ஊடாக இந்த அரசியல் பிக்குகள் தனது அரசியல் மறு பிரவேச முயற்சியைத் தொடங்கியுள்ளனர். விக்கிரமசிங்க அரசாங்கம் தனது அரசியல் தேவைகளுக்காக அவர்களுக்கு அடிபணியாமல் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியிருந்தால், இந்த அரசியல் துறவிகள் இன்னுமொரு சாதகமான நேரத்தை எதிர்பார்த்து பின்வாங்கியிருக்கலாம். ஆனால் நிர்வாகமோ செயலிழந்து இருப்பது போல காட்டிக் கொண்டது. ICCPR சட்டத்தை மத நிந்தனை எதிர்ப்புச் சட்ட மாக பயன்படுத்துவதற்கு வழி விட்டது. அது மட்டுமல்லாமல், அதனை பாரபட்சமான முறையில், குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுவதையும் அனுமதித்தது. இதனால் நடாஷா எதிரிசூரிய மற்றும் புருனோ திவாகர பௌத்த மதத்தை இழிவுபடுத்தியதற்காக இன்னும் காவலில் உள்ளனர். அதேநேரத்தில் “சித்தார்த்தா ஒரு தோற்றுப் போனவர்” என்ற படைப்பை உருவாக்கிய திலித் ஜயவீர, கிறிஸ்தவர்கள் மீது சிங்கள-பௌத்தர்களின் கோபத்தை தூண்ட முயன்ற பலாங்கொட கஸ்ஸப தேரோ மற்றும் பௌத்தர்கள் அல்லாதவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத வகையில் ஒரு மத மோதலை உருவாக்க அச்சுறுத்திய அக்மீமன தயாரதன தேரர் ஆகியோர் சுதந்திரமாக அவர்களின் பிரிவினைவாத அரசியலை நடத்திக் கொண்டு இருக்கின்றனர். அரசியல் வர்க்கத்தின் கோழைத்தனமும் சந்தர்ப்ப வாதமும் அரசியல் துறவிகளுக்கு துணிவை வரவழைத்தன. எனவே குருந்திக்கு அணி வகுப்பு தொடங்கியது. குருந்தியில் வெற்றி பெற்றால், மீண்டும் தடுக்க முடியாதவர்களாகி விடுவார்கள். இந்த நாடு அவர்களின் நாடாக இருக்கும்.

மிஹிந்தலையைச் சேர்ந்த வலவஹங்குனவாவே தம்மரதன தேரரின் கூற்றும் இதுதான். பண்டைய மன்னர்களால் துறவு பீடத்திற்கு (சாசனத்திற்கு) தானமாக வழங்கப்பட்டதால், இந்த நாடு பௌத்த சங்கத்தின் சொத்து என்று அவர் கூறுகிறார். ஏனைய பிக்குகள் வடக்கு/கிழக்கு நிலப் பிரச்சினைகளுக்கும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு/ விற்பனைக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அதன்படி அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு நேர் எதிரானது. மேலும், விக்கிரமசிங்கவின் மற்றுமொரு வாக்குறுதியான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்வது என்பதையும் குருந்தி பிரச்சினையையும் தொடர்புபடுத்தி உள்ளனர்.

முன்னர் எப்பொழுதும் இலங்கை இருந்திராத வகையில் அதனை மாற்றுவது தான் அவர்களின் திட்டம். ஒரு சிங்கள-பௌத்த மதவாத நாடாக அதனை மாற்றுவது தான் அத் திட்டம். அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் தொடங்கி எந்த நாடகங்கள் வானொலியில் அனுமதிக்கப்படும் என்ற விடயம் வரை சிறிய மற்றும் பெரிய விடயங்களில் எல்லாம் பிக்குகள் தான் இறுதி முடிவெடுக்கும் பூமியாக இலங்கையை மாற்றும் திட்டமே அவர்களுடையது. உதாரணமாக, சக்திக சத்குமார வழக்கின் பிரதான சூத்திரதாரியான அ°ஹுங்கல்லே ஜினாநந்த தேரரின் ICCPR முறைப்பாட்டைத் தொடர்ந்து நாடக ஆசிரியர் மாலக தேவப்பிரிய 2019 அக்டோபரில் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார் என்பதை இங்கு குறிப்பிடலாம்.

உத்தேச ஒலிபரப்பு ஒழுக்காற்று ஆணைக் குழு சட்டத்தை நியாயப்படுத்தும் முயற்சியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது புத்தகங்கள் எரிக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார். புத்தகங்கள் எரிக்கப்பட்டது காட்டுமிராண்டித்தனமான செயல். அதைச் செய்த குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்தச் செயலின் தாக்கத்தினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரகலய தொடர்பான அனைத்து விடயங்களிலும் வெறுப்பைக் காட்டுகிறார். இந்த வெறுப்பு அபாக்கியவசமாக அந்த காட்டுமிராண்டிச் செயலிலும் விடப் பயங்கரமான இனவாத வலதுசாரித்துவத்தில் இருந்து வெளிப்படக்கூடிய ஆபத்துக்களை பார்க்கவிடாது மறைக்கிறது.

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் ஜனாதிபதியின் இரண்டாவது சந்திப்பில் நடந்தவற்றை சித்தரிக்கும் காணொளி ஒன்று அண்மையில் கசிய விடப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், சிங்கள ராவயவின் செயலாளர் மதுபாஷண பிரபாத் எதையும் மறைக்கவில்லை. “ராஜீவ் காந்திக்கு என்ன நடந்தது என்பதை ரணில் கவனிக்க வேண்டும். தேசபக்தர்கள் உங்களுக்கு அருகில் கூட இருக்கலாம். அதிபருக்கு மிக நெருக்கமான குழுவினரால் தான் இந்த காணொளி கசிய விடப்பட்டது. இது உயர் பாதுகாப்பு உள்ள அலுவலகத்தில் நடந்தது. அப்படிப்பட்ட இடத்தில் இருந்து அதை எளிதில் ஒருவராலும் கசிய விட முடியாது. இதன்மூலம் தம்மைச் சுற்றி சிங்கள பௌத்தர்கள் இருப்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும். அந்த தேசப்பற்றுள்ள பௌத்தர்கள் நாட்டுக்காக எதையும் செய்வார்கள். நாட்டுக்கு தேவையான அனைத்து தலையீடுகளையும் செய்வார்கள்” என்றார்.

## ஆயுதப்படுத்தப்படும் தொல்லியல்

பௌத்த ஆலோசனை சபைக்கு தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்திற்கான பணிக்குழு ஒன்றை 2020 ஆனி மாதம் நியமித்தார். பணிக்குழு ஓரினத்தன்மையான குழுவாக இருந்தது. அதன் தலைவராக ஜனாதிபதியின் உதவியாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்னா இருந்தார். அதன் உறுப்பினர்களில் தெரண உரிமையாளர் திலித் ஜயவீர மற்றும் இரண்டு பிக்குகள் அடங்குவர். இலங்கையில் பணிபுரியும் பல தமிழ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் கூட இல்லை. மேலும் நான்கு பிக்குகள் மற்றும் அடையாளத்திற்காக ஒரு தமிழர் மற்றும் ஒரு முஸ்லீம் பின்னர் சேர்க்கப்பட்டனர். பௌத்தத்தைக் காப்பதற்காக கோட்டாபய ராஜபக்ஷ “ஹிட்லராக கூட இருக்கலாம்” என்று சொல்லிய வெண்டருவே உபாலி தேரோ இந்த பிக்குகளில் ஒருவர்.

> ”
> **வரலாற்றை மீண்டும் எழுதவும், அதற்கேற்ப ஆதாரங்களை உருவாக்கவும் தொல்பொருளியல் பயன்படுத்தப்பட்டது**

பணிக்குழுவின் இரண்டு ஆரம்ப பிக்கு உறுப்பினர்களில் ஒருவர் சிங்கள-பௌத்த தொல் லியல் துறையின் தலைவரும் ஜாதிகஹெல உறுமயவின் ஸ்தாபகத் தலைவருமான எல்லா வல மேதானந்த தேரர் ஆவார். புத்த மதத்தை ஒழிப்பதற்கான கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் சதி செய்வதாகவும், “துறவிகளுக்கு HIV வைரஸ் தொற்றை ஏற்படுத்துவது அவர்களின் திட்டத்தின் ஒரு பகுதி” (தி சண்டே டைம்ஸ் 19.8.2007) என்பதாகவும் தான் அவரது யதார்த் தம் இருக்கிறது. கோணேஸ்வரம் கோவிலாக இருப்பதற்கு முன்பு பௌத்த ஆலயமாக இருந்ததாகவும் அவர் கூறுகிறார். இதுபோன்ற பிக்குகள் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், கோட்டாபய ஜனாதிபதி பதவி திடீரென முடிவுக்கு வந்திருக்கவில்லை என்றால், நம் நாட்டிலும் ஒரு அயோத்தியா உருவாகி இருக்கும்.

மற்றைய பிக்கு உறுப்பினர் பாணமுரே திலகவன்ச தேரர் ஆவார். 2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான தனது சொந்த பார்வையை அவர் பகிரங்கப்படுத்தினார். “இந்தத் தருணத்தில் இந்த நாட்டின் சிங்கள-பௌத்தர்களாகிய நாம் அதிர்ஷ்டசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருக்கிறோம். ஒரு சகாப்தம் ஆரம்பமாகி இருக்கிறது. அபாக்கியமான கால கட்டத்தை முடிவுக்கு கொண்டு வர, புதிய சூழலை, புதிய நிர்வாகத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த ஒரு சகாப்தம் ஆரம்பமாகி இருக்கிறது. ஒரு சிங்கள-பௌத்த தலைவர் என்ற வகையில் அவர் (கோட்டாபய ராஜபக்ஷ) ஒரு பாதுகாப்பான சிங்கள-பௌத்த ஆட்சியை நிறுவ முயல்வதில் மகா சங்கத்தினர் என்ற வகையில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். 1980 தசாப்தத்தில், திரு. சிறில் மேத்யூ, புராதன பௌத்த ஆலய இடிபாடுகளை அடையாளம் கண்டு, அவற்றை அபிவிருத்தி செய்து, சிங்கள விவசாய சமூகங்களை அமைத்தார். இந்த சிங்கள விவசாய சமூகங்கள் வடக்கு-கிழக்கில் தொடர்ந்திருந்தால், இந்த மாகாணங்கள் தீவிர வாதிகளின் பிடியில் சிக்காமல், நெருக்கடிகள் இல்லாமல் பாதுகாப்பாக இருந்திருக்கும்.”

2022 ஆம் ஆண்டு, பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க நினைவுச் சொற்பொழிவை புகழ் பெற்ற தொல்பொருள் ஆய்வாளர் ஜகத் வீரசிங்க ஆற்றினார். தொல்பொருளியல் ஜன ரஞ்சகத்திற்கு அடிபணிந்து “தற்போதுள்ள மேலாதிக்கங்களுக்கு” கைக்கூலியாக மாறுவது பற்றிய தனது பயத்தை அங்கு அவர் குறிப்பிட்டார். இந்தப் பயத்தை பேராசிரியர் பண்டார நாயக்கவுடன் பகிர்ந்து கொண்டதாக சொன்னார். அப்பொழுது, “ஹார்டன் சம வெளியை (Horton Plaine) பாருங்கள். தீவின் மற்றைய பகுதிகள் பெரும் மாற்றங்களுக்கு உட்படும் போதும் ஹார்டன் சமவெளி தன் சூழலை ஓரளவுக்கு மாறாமல் வைத்திருக்கிறது. அதுபோலவே உங்களுக்கும் உங்கள் சகாக்களுக்கும் ஒரு ஹார்டன் சமவெளியை உருவாக்குங்கள்”. (சண்டே ஐலண்ட் 23.3.2022 இல் மறுபதிப்பு செய்யப்பட்டது) என்று பண்டார நாயக்கா சொன்னதாக வீரசிங்க தெரிவித்தார். பேராசிரியர் வீரசிங்கவின் அச்சங்கள் உண்மை யாகின்றன. துறவிகள், அரசியல்வாதிகள் மற்றும் சுயநலவாதிகளுக்கு அடிபணிந்து நடக்கும் தொழில் வல்லுநர்களால் தொல்லியல் ஆயுதமாக்கப்படும் போது, அது மிருகத்தனமான மோதல்கள் மற்றும் நீண்ட போர்களுக்கு ஒரு விதைக் களமாக மாறும். அடுத்தடுத்து வரும் மோதல்களின் பின்னரும் ஹார்டன் சமவெளி உயிர் வாழ முடியுமா என்பது எவராலும் ஊகிக்க முடியாத ஒன்று.

கோட்டாபய ராஜபக்சவின் பணிக்குழுவின் நியமனத்துடன், வரலாற்றை மீண்டும் எழுதவும், அதற்கேற்ப ஆதாரங்களை உருவாக்கவும் தொல்

பொருளியல் பயன்படுத்தப்பட்டது. பாணமுரே தேரரின் இந்த "பாரம்பரிய பாதுகாப்பு" செயற்பாடுகள் பணிக்குழுவின் பேரினவாத தலைவர் கூட எதிர்ப்புக் காட்டும் நிலைகளை எட்டியது. 2021 மாசி மாதம் நடந்த ஓய்வு பெற்ற ஜெனரல் குணரத்னவுடனான சந்திப்பில், துறவியால் நடத்தப்பட்ட பெருமளவான காடழிப்பு பற்றி மாவட்டச் செயலாளர்கள் முறையிட்டனர். பொதுமக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். துறவியோ அவற்றுக்கெல்லாம் கடும் மறுப்பை தெரிவித்து விட்டு தனது வேலைகளை தொடர்ந்தார்.

கோட்டாபய ராஜபக்ச தப்பி ஓடிய பின்னர் பணிக்குழு செயல்படுவதை நிறுத்தியது. ஆனால், சிங்கள-பௌத்தத்தின் பெயரால் கிழக்கைத் தமக்காகக் கைப்பற்றும் அரசியல் பிக்குகளின் முயற்சிகள் தொடர்ந்தன.

2022 கார்த்திகையில், மெதகொட அபய திஸ்ஸ தேரரின் அனுசரணையில் தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்புகளின் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இராணுவத்தின் ஈடுபாட்டுடன் இராணுவ முகாம்களுக்கு அருகில் புதிய கோவில்களை அமைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2023 சித்திரையில், புல்மோட்டையில் நடந்த ஒரு மறக்க முடியாத சம்பவத்தில் ஓர் அரசியல் துறவியின் மெய்க்காப்பாளர், எதிர்ப்புத் தெரிவித்த தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் கொண்ட குழுவை நோக்கி துப்பாக்கியை நீட்டிய காணொளி ஒன்று வெளிவந்தது. துறவிகள் உட்பட அரசியல்வாதிகள் அல்லாதவர்களை பாதுகாக்க 5,400 பொலிஸார் பயன்படுத்தப்படுகிறார்கள் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். தம்மத்துடன் வாழ்பவர்கள் தம்மத்தால் பாதுகாக்கப்படுவார்கள் என்று புத்தர் கூறினார். அப்படியானால் மெய்க்காப்பாளரால் தம்மை காக்கும் துறவிகள் புத்தரின் வார்த்தைகளை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை என்று அர்த்தம். அல்லது அந்த வார்த்தைகள் தம்மை பாதுகாக்காது என்பதை தெரிந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தை 2023 ஆம் ஆண்டு மே மாதம் இந்தப் பின்னணியில் தான் சந்தித்தார். வடக்கு கிழக்கில் திணைக்களத்தின் வழமைக்கு மாறான கூடிய கவனம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க இரண்டு விளக்கங்களை வழங்கினார். யுத்த காலத்தில் இந்தப் பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று சொன்னார், இப்பிரதேசங்களில் நடக்கும் வேலைகளுக்கு வெளியாட்கள், பெரும்பாலும் துறவிகள் மூலம் நிதியளிக்கப்படுகின்றது என்றும் சொன்னார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பணம் படைத்த பிக்குகள் தொல்பொருள் திணைக்களத்தின் நிகழ்ச்சி நிரலை வழிநடத்த தமது பணத்தைப் பயன்படுத்துகின்றனர்.

தொல்லியல் திணைக்களம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல, அரசாங்கத்தின் வெளிவளங்கள் திணைக்களத்திடம் இருந்து மட்டுமே அது நிதியை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை பணிப்பாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி சரியாகவே சுட்டிக்காட்டினார். "தொல்லியல் மதிப்புடைய ஏதேனும் ஒன்று அங்கு கண்டுபிடிக்கப்பட்டால், அங்கு யாரும் வீடு அல்லது புத்த கோவிலை அமைக்க முடியாது. அது நாட்டினுடைய சொத்து" என்று அவர் மேலும் கூறினார். பணிப்பாளர் நாயகம் வேறு விதமாக நினைத்தார் என்பது தெளிவாகவே தெரிந்தது. இதுவே பிரபலமான அந்த இரண்டாவது சந்திப்பிற்கு வழிவகுத்தது.

**பாரம்பரியம் என்கின்ற நாடகப் பிரதி**

போரில் வெற்றி பெற்ற உடனேயே, மகிந்தவும் கோட்டாபய ராஜபக்ஷவும் தங்கள் வெற்றியை நினைவு கூறும் வகையில் அனுராதபுரத்தில் ஒரு ஸ்தூபி கட்ட முடிவு செய்தனர். 2021 கார்த்திகையில் இந்த கட்டிடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எரிவாயுக்காக மக்கள் வரிசைகளில் காத்திருப்பது தொடங்கியிருந்தது. நான்கில் ஒரு பங்கிற்கும் அதிகமான மக்கள் ராஜபக்சக்களால் "காப்பாற்றப்பட்ட" நாட்டை விட்டு வெளியேறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இருந்த போதும் இந்த பிரதிஸ்டை நடந்தது. "இராணுவம், கடற்படை, விமானப் படை மற்றும் சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த போர் வீரர்களின் அழியாத நினைவுகளும் விலை மதிப்பற்ற தியாகங்களும் மீண்டும் நிரந்தரமாக்கப்பட்டன, புனிதப்படுத்தப்பட்டன."

என்று டெய்லி நியூஸ் பறை தட்டியது. ஒரு வன்முறைப் போரைக் கொண்டாடுவதற்கு ஒரு அகிம்சையைப் போதிக்கும் மதத்தை டெய்லி நியூஸ் இழிவுபடுத்தியது. கட்டப்பட்ட சந்த ஹிரு சேயா தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த அந்த இடத்தில் ஒருபோதும் கட்டப்பட் டிருக்கக் கூடாது என முன்னாள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸா நாயக்க தெரிவித்துள்ளார். அந்தக் கட்டிடத்து க்கு அனுமதி வழங்க வேண்டிய கட்டாயம் தனக்கு ஏற்பட்டது என்று அவர் கூறினார். கிழக்கின் தொல்பொருள் பாரம்பரியத்தை தமது இரத்தத்தாலும் கண்ணீராலும் காப்பாற்ற உறுதிமொழி எடுத்திருக்கும் பெரும்பாலான அரசியல் பிக்குகள் ராஜபக்சக்களின் இந்த இரட்டை அவமதிப்பு குறித்து மௌனம் காத் தனர்.

2010 ஆம் ஆண்டு ஆடி 17 ஆம் திகதி இரவு ஆயுதமேந்திய கும்பல் ஒன்று பனம்-பட்டுவ வில் உள்ள பழங்கால சிங்கள கிராமமான ராகம் வெலவிற்கு தீ வைத்த போதும் அவர்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ராகம்வெல பிரதேசத்தைச் சேர்ந்த முதியன்சேலாகே பண் டார தெரிவிக்கையில், “அவர்கள் எங்களை வெளியே அழைத்துச் சென்று கொலை மிரட் டல் விடுத்தனர். அவர்களிடம் இரண்டு T56 துப்பாக்கிகள் இருந்தன. நான் எப்படியோ தப் பியோட முடிந்தது. ஆனால் நான் திரும்பி வரு வதற்குள் அவர்கள் எல்லா இடங்களிலும் தீயி ட்டுக் கொண்டிருந்தனர்” (BBC 18.7.2010).

கிராம மக்கள் சிலர் உதவிக்காக அரு கில் உள்ள STF முகாமுக்கு ஓடிச்சென்ற போது, STF வீரர்கள் தலையிட மறுத்து விட்டனர். எரிந்த கிராமத்திற்கு மக்கள் திரும்புவதை பொலிஸார் தடுத்தனர். வெல்லஸ்ஸ-திகாமடுல் லவின் பிரதான சங்கநாயகர் கிராமக் கோவி லில் ‘வாஸ்’ அனுசரிப்பதற்கு தடை விதிக்கப் பட்டது. ராகம்வெல சமுத்திரகிரி ஆலயம் என்ற புராதன தொல்பொருள் தளத்தையும் கடற்படை அழித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எவ்வாறு இழந்த காணிகளை மீட்க இன்னமும் போராடி வரு கின்றார்களோ அவ்வாறே ராகம்வெல மற்றும் பானமா கிராம மக்களும் இன்னமும் போராடி வருகின்றனர்.

> **“இளவரசர் சித்தார்த்தர் ஞானம் பெறுவதற்காக உலக செல்வத்தைத் துறந்தார். அரசியல் துறவியோ பௌத்தத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பெறவும் செல்வத்தை குறிப்பாக நிலத்தைக் குவிக்கவும் செய்கிறார்”**

புத்தர் கூறினார், “துறவிகளே, உங்களு க்கு நீங்களே தீவுகளாக இருங்கள், வேறு எவரும் இல்லாமல் நீங்களே உங்கள் சொந்த புகலிடமாக இருங்கள் வேறு எதுவும் இல் லாமல், தம்மம் உங்களுக்கு ஒரு தீவாகவும் புகலிடமாகவும் இருக்கட்டும்.” (அட்டாதிபா சுத்தா) என்று. ஆனால் அரசியல் துறவிகளோ இந்த குறிப்பிட்ட தீவை தனது சொத்து என்று கூறி வருகின்றனர். இளவரசர் சித்தார்த்தர் ஞானம் பெறுவதற்காக உலக செல்வத்தைத் துறந்தார். அரசியல் துறவியோ பௌத்தத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பெறவும் செல் வத்தை குறிப்பாக நிலத்தைக் குவிக்கவும் செய்கிறார். ஒவ்வொரு சிறிய பெரிய அரசியல் வாதிகளும் இந்த பலம் மிக்க, உரத்த குரலில் கர்ச்சிக்கின்ற இந்தக் குழுவை எதிர்க்க பயந்து ஒத்தூதுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அரிதான விதிவிலக்கு அவர் பேச்சில் சொல்வதை செயலில் செய்வாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தற்போது எல்லோராலும் பேசப்படும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனா திபதிக்கும் இடையிலான சந்திப்பின் போது, பாரம்பரியத்தின் பாதுகாப்பு என்ற போர்வையில் பாணாமுரே தேரர் காணிகளை சுவீகரித்து இருப் பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். மேலும் அவர் தற்போது இந்த காணிகளில் விவசாயம் செய் யும் மக்களிடம் இருந்து வரி அறவீடு கோரு வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மெத கொட அபேதிஸ்ஸ தேரர், ஆசிரிமலை புனிதப்

பகுதிக்குள் நிலம் குத்தகைக்கு விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை நியாயப்படுத்தினார். பிக்குக்கு அதற்கான உரிமை உண்டு என்று அவர் வாதிட்டார். எல்லாவல மேதநாத தேரர் இன்னும் ஒருபடி மேலே சென்று, குருந்தி கோயிலால் சொந்தம் கொண்டாடப்படும் காணியை மாத்திரமன்றி அதனைச் சூழவுள்ள காணியை யும் சிங்கள-பௌத்தர் அல்லாதவர்களுக்கு வழங்கக் கூடாது என்றார்.

எனவே இதுதான் பாரம்பரியப் பாதுகாப்பு என்ற நாடகப் பிரதி. தொல்லியல் ஆர்வமுள்ள ஒரு பகுதியை அடையாளம் காண வேண்டும். அதனை புண்ணிய பூமி என்று உரிமை கொண்டாட வேண்டும். ஒரு துறவியை பாதுகாவலராக நியமிக்க வேண்டும். நிலத்தை குத்தகைக்கு விடுவது உட்பட அவர் விரும்பியதை எல்லாம் செய்ய அனுமதிக்க வேண்டும். இவைதான் அந்த நாடகத்தின் காட்சிகள்.

தொல்பொருள் தளங்கள் சிதைக்கப்படுவதையும், காடுகள் அழிக்கப்படுவதையும் சுட்டிக் காட்டும் பொழுது அதிகாரிகள் காது கேளாதவர்களாகவும், கண்பார்வை அற்றவர்களாகவும், ஊமைகளாகவும், இருப்பார்கள். தாய்லாந்தில் பிறந்த யானை முத்துராஜாவை கண்டே விகாரையில் வைத்து பாதுகாவலர்களும், துறவிகளும் கொடூரமாக நடத்தியதைச் சுட்டிக் காட்டிய பொழுதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவற்றைப் புறக்கணித்தது போல் தான் இதுவும்.

முத்துராஜா இலங்கையில் பிறக்காமல் போனது அது செய்த பாக்கியம். அதன் அவல நிலை தாய்லாந்தில் தெரிந்ததும், அதனை அங்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்று தசாப்தங்களாக இந்த சிங்கள பௌத்த நரகத்தில் வாழ்ந்த முத்துராஜா இறுதியாக விடுதலையானது.

நில வெறி கொண்ட அரசியல் பிக்குகளின் அபகரிப்புகளால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கைச் சேர்ந்த சாதாரண தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு அவ்வாறான தப்பிக்கும் வழிகள் இல்லை. இங்கு பிறந்து, ஏழையாக இருந்து, மேலிடங்களுடன் தொடர்பற்று இருப்பவர்களுக்கு செல்வதற்கு வேறு இடம் இல்லை. துன்பப்படுவதையும், முறையிடுவதையும், வெறுப்பதையும் தவிர அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்? இந்த வேறு வழியற்ற நிலை ஒரு ஆபத்தான வாழ்நிலை. தங்களது புவியியல் ரீதியான சிங்களம் மட்டும் வேலைத்திட்டத்தின் மூலம் அரசியல் துறவிகள் அடுத்த மோதலுக்கு வித்திடுகின்றனர். 1956 இல் அவர்களின் முன்னோர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் பொருளாதார ரீதியாக செய்ததைப் போல.

(20ஆம் பக்க தொடர்ச்சி)

களை மக்கள் இன்னமும் நேசிக்கின்றார்கள். அதற்கு உண்மையாக ஒவ்வொரு ஊடகவியலாளரும் இருக்க வேண்டும். இன்னும் எங்களுடைய ஊடகப் பரப்பு வலிமை பெற வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தான் சார்ந்த இன மக்களுக்கு உண்மையாக இருப்பது தான் ஓர் ஊடகவியலாளரின் நடுநிலை.

தமிழ் தேசிய செயற்பாட்டாளரான சிறீஸ்கந்த ராஜா யோகராஜா தெரிவித்த கருத்துகள் வருமாறு. பல இடங்களில் பத்திரிகைகள் அரசியலை, ஆட்சி செய்தவர்களை மாற்றி இருக்கின்றன. அதிகார வர்க்கத்தையே மாற்றி இருக்கின்றன. சர்வதேசத்தில் எங்களுக்கு எதிரான ஊடகங்கள் பல இருக்கின்றமையால் தமிழ் ஊடகங்களுக்கு ஒரு தார்மீக பொறுப்பு இருக்கிறது. எங்களுடைய போராட்டத்தை வெளிக்கொண்டுவர வேண்டிய பொறுப்பு எங்களிடம் தான் இருக்கிறது. தேசிய ஊடகங்கள் நியாயமாகவும் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும் குரல் கொடுத்தால் அதுதான் சரியாக இருக்கும். தேசியத்திற்காக குரல் கொடுக்கின்ற எந்தவொரு ஊடகத்தையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவான ஊடகம் எனக் கருதுவது பிழையானது.

தமிழ் முரசம் வானொலியின் பணிப்பாளரான மனோ நாகலிங்கம் தெரிவித்த கருத்துகள் வருமாறு, தமிழ் தேசிய ஊடகங்கள் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பது சாதாரணமானவர்களுக்கே புரியும். இங்கே எந்தவிதமான நடுநிலையும் இல்லை. தமிழ் தேசியம் சார்ந்து தான் இருக்க வேண்டும். தமிழ் தேசிய அரசியலை காப்பாற்றுகின்ற ஊடகமாக இருக்க வேண்டுமே தவிர ஒருபோதும் அந்த அரசியலை நலிவடைய செய்கின்ற ஊடகமாக இருக்க கூடாது. இன்று பெரும்பாலான ஊடகங்கள் பிராந்திய நிகழ்ச்சி நிரலுக்குள் இயங்கியவாறு தமிழ் தேசிய அரசியலை தொடர்ச்சியாக நலிவடைய செய்கின்றன. மிகப்பெரிய ஊடகங்கள் கூட இந்த அரசியலுக்குள் தான் சிக்குண்டு இருக்கின்றார்கள். முன்னர் எத்தனையோ ஊடகவியலாளர்கள் எங்களுடைய அரசியலை விட்டுக்கொடுக்காது அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றியதன் நிமித்தம் தான் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த மரபிலிருந்து வந்த நாங்கள் சாதாரண சலுகைகளுக்காக விலை போகக் கூடாது.

# தமிழ் தேசிய அரசியலும் தமிழ் ஊடகங்களின் வகிபாகமும்




தொகுப்பு - ரஜீந்தினி

மேற்படி தலைப்பில் நோர்வேயின் தமிழ் முரசம் வானொலியில் 27.05.2023 அன்று இணைய (zoom) வழிக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய தமிழ் முரசம் வானொலியின் அறிவிப்பாளரான குகன் யோகராஜா, போராட்ட காலங்களில் வெளிவந்த ஊடகங்கள் ஊடக தர்மத்தை உச்சமாக மதித்தன என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த கருத்துகள் பின்வருமாறு இருந்தன. அடக்குமுறைக்கு எதிரான தெளிவூட்டலை மக்களிற்கு ஏற்படுத்தி, மக்களின் போராட்டத்திற்கான உந்துதல் சக்தியை மக்களிடையே விதைத்து அவர்களை ஒருமுகப்படுத்தும் பணிகளை ஊடகங்கள் செய்தன. துணிவோடும் அறத்தோடும் இருந்தன. ஒரு காலத்திலே சுதந்திரன் என்கின்ற ஒரு பத்திரிகை யாழ்ப்பாணத்திலே வெளிவந்திருக்கின்றது. அது தமிழரசு கட்சியினுடைய உத்தியோகபூர்வ பத்திரிகையாக இருந்தது. அதனுடைய ஆசிரியராக கோவை மகேசன் அவர்கள் இருந்திருக்கிறார். எவ்வளவு அடக்குமுறைகள் ஆளும் சிங்கள வர்க்கத்தால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டாலும் கூட அவற்றுக்கு எல்லாம் அஞ்சாமல் தன்னுடைய பத்திரிகைகளிலே முதல் பக்கத்தில் முழுப் பக்கத்திலோ அல்லது அரை பக்கத்திலோ தனியே கறுப்பு நிறத்தினை மாத்திரம் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பினை வெளிப்படுத்தி இருந்தார். இவ்வாறான துணிவெல்லாம் அன்றைய காலத்திலே ஊடகங்களில் இருந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை என்பது ஒரு கவலைக்குரிய விடயம்.

2009 ஆம் ஆண்டு ஒரு மாபெரும் இனவழிப்போடு எங்களுடைய ஆயுத ரீதியிலான போராட்டம் முடக்கப்பட்டிருக்கின்றது. அதனை தொடர்ந்து வந்திருக்கும் 14 வருட காலப்பகுதியிலே தமிழ் ஊடகங்கள் தமிழ் தேசிய அரசியலுக்காக தமிழ் தேசியத்தின் இருப்புக்காக என்ன பங்காற்றி இருக்கின்றன என்ற பெரிய கேள்வி இருக்கின்றது. இதற்கு உதாரணமாக சமீபத்திய மக்கள் போராட்டங்களை நீங்கள் பார்க்கலாம். சமீபத்தில் தையிட்டியிலே சட்டவிரோதமாக மக்களுடைய காணிகளை ஆக்கிரமிக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கும் திஸ்ஸ ரஜமகா விகாரையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று மக்கள் போராடி இருந்தார்கள். அந்த விகாரை அமைக்கப்பட்டிருக்கிற நிலத்திற்கு உரிமையானவரிடம் திரும்ப அந்த நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும், அதனை சுற்றியுள்ள மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் மீண்டும் விடுவிக்கப்பட்டு உரிய மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையோடு மக்கள் போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றன. ஆனால் இந்த மக்கள் போராட்டங்களுக்கு தமிழ் ஊடகங்கள் கொடுத்த பெறுமானம் என்ன என்கிற கேள்வி எப்பொழுதுமே இருந்து வருகிறது.

தையிட்டியில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது அரச அடக்குமுறைகளை காணொளி ஊடாக பார்த்திருப்பீர்கள். செய்தியாளர்கள் ஊடாக கேள்விப்பட்டு இருப்பீர்கள். அந்த போராட்டத்திலே கலந்து கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய சார்பிலே பேசக்

> **எங்களுடைய ஊடகங்கள் அறம் சார்ந்து எதை செய்ய வேண்டுமோ அதனைச் செய்யவில்லை எதை செய்யக் கூடாதோ அந்த விடயங்களை மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றன**

கூடியவர்கள் அதேபோல பொதுமக்கள் சார்பிலே பேசக்கூடியவர்கள் போராட்டத்திலே கலந்து பங்கெடுத்தவர்கள் சார்பிலே பேசக்கூடியவர்கள் எல்லாம் அங்கே நடந்த அடக்குமுறைகளை வெளிக்கொண்டு வந்திருந்தார்கள். ஆனாலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற சில அச்சு ஊடகங்கள் இந்த விடயங்களிற்கு முதன்மை கொடுக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது.

இந்த செய்திகளை பத்திரிகையின் முதல் பக்கத்தில் தலையங்கமாக போட்டு அந்த போராட்டங்களினுடைய தாற்பரியத்தை அதனுடைய தேவையை மக்களிடம் கொண்டு சேர்த்து, மக்களை ஒருமுகப்படுத்தி அந்த போராட்ட களங்களிற்கு அவர்களை வரவைக்க வேண்டும் என்கிற தார்மீக கடமையை அந்த ஊடகங்கள் செய்யவில்லை. இரண்டாவது மூன்றாவது பக்கத்திலே பெட்டி செய்தியாக போடுகின்ற நிலைமை தான் இன்று தொடர்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள் தான் எங்களுடைய ஊடகங்கள் அறம் சார்ந்து எதை செய்ய வேண்டுமோ அதனைச் செய்யவில்லை என்று சிந்திக்க வைக்கின்றன. எதை செய்யக் கூடாதோ எதனை திணிக்க கூடாதோ அந்த விடயங்களை மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றன என்று கவலைப்பட வைக்கின்றன.

இதனையடுத்துப் பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி நடராசா காண்டீபன் தெரிவித்த கருத்துகள் வருமாறு. ஜனநாயகத்தை தாங்கி நிற்கின்ற வலுவுள்ள ஒரு தூண் தான் ஊடகம். ஆயுத போராட்டத்துக்குப் பின்னரான ஒரு சூழலிலே இந்த ஊடகங்களினுடைய கடப்பாடும் கடமைகளும் வெகு ஆழமாக உணரப்படுகிற ஒரு காலகட்டத்தில் இருந்து கொண்டு தான் நாங்கள் இதனை பேசுகிறோம். தமிழ் தேசிய அரசியல் பரப்பிலே ஜனநாயக அடிப்படையிலே கட்சிகள் உருவாக்கப்பட்ட பொழுது தமிழ் கட்சிகளுக்காக பல பத்திரிகைகள் இருந்தன. சுதந்திரன், தாயகம், தமிழகம், தமிழன் என்கிற பத்திரிகைகள் எல்லாமே 40 ஆம் ஆண்டு பிற்பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டன. இவை அச்சு ஊடகங்கள். அதற்கு பின்பு ஒலி ஊடகம் என்ற வானொலி உள்வாங்கப்படுகிறது. அதற்கு பின்னராக ஒலி, ஒளி ஊடகமாக தொலைக்காட்சிகள் உள்வாங்கப்படுகின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய காலகட்டத்தில் சமூக வலைத்தளங்கள் பேசுபொருளாகியுள்ளன.

விடுதலைப்புலிகளினுடைய போராட்டக்காலத்தை நாங்கள் எடுத்தால் அதிலே பல பத்திரிகைகள் அச்சு ஊடகங்கள் வழியாக கொண்டு வரப்பட்டன. அதற்கு பிறகு நிதர்சனம் தொலைக்காட்சி, புலிகளின் குரல் வானொலி என்பன வந்தன. விடுதலைப் புலிகளினுடைய பத்திரிகை அந்த விடுதலை போராட்டத்தினுடைய நேர்த்தியையும் அதனுடைய உண்மைகளையும் வெளிக்கொண்டு வர வேண்டி உருவாக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு பத்திரிகை.

அதேபோல அன்றைய காலகட்டங்களிலே முரசொலி, ஈழமுரசு, ஈழநாதம், உதயன், சுடரொளி என்றவாறாக பிராந்திய பத்திரிகைகளாக அறியப்பட்ட பத்திரிகைகள் இருந்தன. இந்த பிராந்திய பத்திரிகைகள் வடக்கிலே எழும்பிய பத்திரிகைகள். இவை எல்லாம் இன்றைக்கு தொடர்ந்தும் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. தேசிய பத்திரிகைகளாக சொல்லப்படுகிற வீரகேசரி, தினக்குரல் மற்றும் அரசினுடைய பத்திரிகையாக வெளிவருகின்ற தினகரன் என்பவை உள்ளன. அதேவேளை பல பத்திரிகைகள் ஆரம்பித்து வெளிவந்து மறைந்து போகின்ற சூழலையும் நாங்கள் பார்க்கிறோம்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் என்று சொல்லப்படுகின்ற அந்த கட்டமைப்பிற்கு கீழே பத்திரிகைகள் அல்லது இந்த ஊடக நிறுவனங்கள் பதியப்பட வேண்டும் என்கிற ஒழுங்குமுறை இருக்கிறது. இந்த நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற பத்திரிகை ஆசிரியர் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் ஆழமான பொறுப்பு இருக்கின்றது.

தமிழ் தேசிய அரசியலும் தமிழ் ஊடகங்களின் வகிபாகமும் என்பது பற்றிய கலந்துரையாடல் காலத்தின் தேவையாகும். குறிப்பாக இன்றைக்கு ஒரு தொலைபேசி வைத்திருப்பவர் தன்னை ஒரு ஊடகவியலாளராக பதிவு செய்து கொண்டு சுயமாக ஓர் ஊடகத்தை நடத்த முடியும். யூடியூப்பில் தமது ஊடகத்தை உருவாக்கி ஒளி, ஒலி வடிவில் தமக்கு தேவைப்படக் கூடிய விடயங்களை முன் நகர்த்துகிற ஒரு போக்கு மிகவும் பயங்கரமானதாக உணரப்படுகின்ற நிலைமையையும் நாங்கள் பார்க்கிறோம்.

இன்றைக்கு ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் பின்னால் ஓர் ஊடகம் இருக்கிறது. தையிட்டியில் கடந்த நான்காம் திகதி நடத்திய போராட்டத்திற்கு அரசியல்வாதிகள் வந்த பொழுது அவர்களுக்குப் பின்னால் ஊடகவியலாளர்கள் ஆறு, ஏழு பேர் ஓடி வருகிறார்கள். நாங்கள் பத்திரிகையாளர்களை சந் தித்தும் கூட அவர்கள் நாம் சொல்வதை கவனத்தில் எடுக்கவில்லை. நடக்கின்ற விடயங்களை உங்கள் பத்திரிகையில் ஆகக் குறைந்தது ஒரு மூலை யிலாவது வெளியில் கொண்டு வாருங்கள் என்று கேட்டோம். வரலாற்றில் இப்படி ஒன்று நடைபெற் றிருக்கிறது என்பதையாவது பதிவு செய்ய வேண்டும். அது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய செய்தியாக கூட இருக்க வேண்டும் என்பது அல்ல, நீங்கள் அரசியலுக்கும் அப்பாலே நின்று இந்த கடமைகளை ஆற்ற வேண்டும் என்று நாங்கள் விநயமாக வேண்டிக் கொண்டோம். அப்படி நாம் வேண்டிக் கொண்ட பத்திரிகைகளிலே கூட வெளி வரும் செய்திகளைப் பார்க்கின்ற பொழுது மிகவும் மனவருத்தமாக இருக்கும். ஏனென்றால் நாங்கள் எங்களுக்கான பிரபலங்களை அதிலே தேட வர வில்லை. சில பத்திரிகைகள் தனித்து அரசியலிற்கா கவே கொண்டு வரப்பட்டு அரசியல்வாதிகளின் நிதியுதவியினாலேயே நடத்தப்படுகின்றன. சில பத் திரிகைகள் புலம்பெயர்ந்தவர்களுடைய முகவர் பத்திரிகை அமைப்புகளாக இருக்கின்றன. பரவ லாக பாரியளவில் நிதிகளை முதலிட்டு இந்த விட யங்களை செய்கிறார்கள்.

தயவுசெய்து ஊடகத்திலே என்ன கருத்தை யும் முன்வையுங்கள். ஆனால் ஒரு கட்சியை அல் லது அமைப்பை முன்னிறுத்தி விமர்சனத்தை முன்வைக்கிற பொழுது அந்த கட்சியினுடைய தலைவரையோ அல்லது ஊடகப் பேச்சாளரையோ தொடர்பு கொண்டு அவர்களுடைய நிலைப்பாட்டை யும் உள்ளடக்கி வெளியிடுங்கள். இதுதான் பத்திரி கையினுடைய தர்மம்.

இன்றைக்கு கோயில் திருவிழாக்களில் களி யாட்டங்களில் மக்களை திசை திருப்புகிற பணி யிலும் ஊடகங்கள் முன்னிற்கின்றன. இந்த வகை யிலே தான், ஒரு ஊடகம் தனது நிலைப்பாட்டை ஆகக் குறைந்தது தமிழ் தேசிய நிலைப்பாடாக வரையறுக்க வேண்டும். அந்த நிலைப்பாட்டுக்கு எதிரான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப் பதை தவிர்க்க வேண்டும். அரசியலை நாங்கள் மாற்றுவதாக இருந்தால் தமிழ் தேசிய பரப்பிலே கடமையாற்றி கொண்டிருக்கின்ற ஊடகங்களுக்கு பாரிய பங்களிப்பு இருக்கிறது.

இன்றைக்கு இங்கு இருக்கின்ற தமிழ் தேசி யத்தை சிதைக்கிற ஊடகங்கள் சார்ந்து நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்ய வேண்டிய சூழலிலே இருக்கிறோம். ஏனென்றால் ஜனநாயகத்தினுடைய ஒரு பண்பாக ஊடகத்தினுடைய நிலைப்பாட்டை நிச்சயமாக விமர்சித்தே ஆக வேண்டும். தமிழ் பத்திரிகை தானே என்று விடவும் முடியாது. ஏனென்றால் இது ஒரு போலியான கருத்தை மக்களுக்குள்ளே கொண்டு போய் சேர்க்கிறது. போலியான தமிழ் தேசிய தரப்பில் இயங்குகின்ற பத்திரிகைகளை நாங்கள் அடையாளங் கண்டு, ஊடகங்களை அடையாளங் கண்டு அவற்று க்கு எதிராக பாரிய பங்காற்ற வேண்டி இருக் கிறது. இந்த ஊடகங்களை தமிழ் தேசிய நிலைப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான ஒரு அழுத்தத்தை கொடுப்போம் என்றால் இந்த ஊடக வியலாளர்களால் தமிழ் தேசம் காப்பாற்றப்பட்டு தமிழ் தேச விடுதலைக்கான அரசியலை தயார் படுத்த முடியும் என்பது என்னுடைய பாரிய நம்பிக்கை.

பத்திரிகை எழுத்தாளர்களாக அறியப்படுபவர் கள் இன்றைக்கு பெரியளவில் மழுங்கடிப்பை செய் கின்றார்கள். ஆய்வாளர்களாக அறியப்படுகின்றவர் கள், பூகோள அரசியலை விளங்கி கொண்டவர்க ளாக சொல்லிக் கொண்டு பூகோள அரசியலை எழுத வருகின்றவர்கள் இந்த விடயங்களை முன்கொண்டு வருவதில்லை. இனப்படுகொலையினுடைய சட் டத் தத்துவத்தை எழுதிய ஒரு பத்திரிகையை நீங்கள் காட்டுங்கள். இவ்வாறு பிராந்திய தேசிய பத்திரிகைகள் முகவர்களுக்கான தரகர்களுக்கான பத்திரிகைகளாகவும் சிங்கள பௌத்த பேரினவா தத்தினுடைய போசிப்பிலே இருப்பதாலும் அவர்கள் தமிழ் தேசிய நிலைப்பாட்டிலே இல்லை. துரதிஷ் டவசமாக இந்த பத்திரிகைகளில் எழுதுகிற பெரும் பாலானவர்கள், கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த இடத்தை ஆக்கிரமித்து நிற்பவர்கள் கொடுக் கின்ற வேதனத்துக்கு எழுதும் ஆட்களாக தான் இருக்கிறார்கள். அவர்கள் ஊடக மாபியாக்களாக இருக்கின்றனர். இப்படியான எழுத்தாளர்களை ஒதுக்க வேண்டும் புறந்தள்ள வேண்டும் அதற்கான ஒரு வேலைத்திட்டம் எங்களிடம் இருக்க வேண்டும்.

கனடா CTR வானொலி அறிவிப்பாளரான சிவவதனி பிரபாகரன் கருத்து தெரிவிக்கையில், காலத்தின் வழிகாட்டியாக செயற்படுகின்ற பெரும் கடமை ஊடகங்களுக்கும் ஊடகத்துறையில் செய லாற்றுபவர்களுக்கும் உண்டு. 2009க்கு முன்னரான காலப்பகுதியில் அனைத்து தமிழ் தேசிய ஊடகங் களும் ஒரே வழியில் பயணித்தன. ஒரே விடயங் களையே பேசின. ஆனால் 2009க்கு பின்னர் ஒரு குழப்ப நிலைக்குள் மக்கள் சென்றதை விட ஊடகப்

பரப்பு சென்று விட்டது. இப்பொழுது ஊடகங்களை மதிப்பிடுவதை விட ஊடகவியலாளர்களைத் தான் மதிப்பிடக் கூடியதாக இருக்கிறது. அதற்கு சற்று விதிவிலக்காக சில ஊடகங்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு ஊடகவியலாளனும் தனித்தனிக் கொள்கையோடு தனித்தனிச் சிந்தனையோடு தனித்தனிப் பார்வையுடன் இருக்கிறார்கள். அவர்களை ஆட்டுவிக்கின்றவர்களாக யார் யாரோ இருக்கின்றார்கள். வெவ்வேறு திசையில் அவர்கள் பயணிக்கின்றார்கள்.

கொள்கை என்று பயணிக்கின்ற ஊடகங்கள் மிக குறைவாக இருக்கின்றன. அன்றைய வழிகாட்டலில் இருந்த தேசிய ஊடகங்கள் பலவும் இன்று மாறி இருப்பதை பார்க்க முடிகிறது. அத்தகைய ஒரு சூழலில் நாங்கள் இன்று பயணிக்கின்ற இந்த ஊடகவியலாளர்களை பார்க்கின்ற பொழுது குறிப்பாக புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஊடகவியலாளர்களுக்கு பெரும் கடமை உண்டு. எப்பொழுதும் மக்களை நாங்கள் குறை சொல்ல கூடாது. ஏனென்றால் மக்கள் ஒரு உன்னதமான போராட்டத்திற்கு துணை நின்றவர்கள்.

இலங்கை தீவுக்குள் ஜனநாயக ரீதியாக ஊடகங்கள் செயற்பட கூடியதாக நிலைமை இல்லை. தமிழ் ஈழ விடுதலை போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தவர்கள் ஈழ விடுதலை வரலாறுகளை எழுதியவர்கள் எல்லாம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்ற விடயங்களை பார்க்கின்றோம். காவல்துறையினர் கட்டாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரை தூக்கி கொண்டு சென்று பற்றைக்குள் வீசுகின்றார்கள். அதனை சொல்வதற்கான ஊடக வெளிகள் இல்லை. மறுபுறம் ஊடகங்கள் எஜமானர்களுக்காக வேலை செய்கின்றவையாக இருக்கின்ற நிலைமையை பார்க்கின்றோம். உண்மைக்காக போராடுகின்றவர்களை இழுத்து வீழ்த்துகின்றவர்களாகவும் அவர்களை சாடுகின்றவர்களாகவும் ஊடகங்கள் இருப்பதை பார்க்கின்றோம்.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக எவர் குரல் கொடுக்கின்றார்களோ எவர் போராடுகின்றார்களோ அவர்களோடு நாங்கள் நிற்கின்றோமே தவிர இங்கே கட்சி அரசியலை ஒரு புலம்பெயர்ந்த ஊடகவியலாளராக நாங்கள் செய்யவில்லை. இன்று தமிழ் தேசிய பரப்பிலே இயங்குகின்ற பெரும்பாலான ஊடகங்கள் தமிழினத்திற்கு உண்மையாக இல்லை. சில ஊடகங்கள் செய்திகளை இருட்டடிப்பு செய்கின்றன. தையிட்டியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம் நடந்தது. இதை எத்தனை ஊடகங்கள் வெளியில் கொண்டுவந்தன? இலத்திரனியல் ஊடகங்கள் செய்த அளவிற்கு கூட அச்சு ஊடகங்கள் செய்யவில்லை.

இன்று போராட்டங்களுக்கு ஆதரவாக இருக்கின்ற பொழுது, அதுவும் பெண்களாக இருக்கின்ற பொழுது எங்கள் மீது தனிப்பட்ட வசைப்பாடல்கள் பொய்யான கதைகள் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக புலம்பெயர்ந்த தளத்தில் இருக்கும் எங்களுக்கே இப்படி இருக்கின்ற பொழுது அங்கு களத்திலே நின்று போராடுபவர்களுக்கு எவ்வளவு பிரச்சனைகள் இருக்கும். இவற்றை திட்டமிட்டே இவர்கள் செய்கின்றார்கள். இதன் பின்னால் வல்லரசுகள் இருக்கின்றன. இவை எல்லாம் தெரியாமல் ஒரு ஊடகவியலாளர் இருக்கப் போவதில்லை. ஆனால் சொல்ல முடியாமல் அல்லது சொல்ல மாட்டாதவர்களாக இருப்பது மிக வெட்கக்கேடு. அப்படி செய்ய முடியாதவர்கள் ஊடகவியலில் பயணிக்க கூடாது.

கண்ணுக்கு தெரிகின்ற எதிரிகளோடு நின்று போராடுபவன் பலமான போராளி ஆனால் கண்ணுக்கு தெரியாத காலவெளிகளில் பல தூரமுள்ள எதிரிகளோடு போராடுகின்றவன் ஒரு ஊடகவியலாளன். அவன் மக்களை நேசிக்க வேண்டும். மக்களோடு பயணிக்க வேண்டும். மக்கள் உணர்வுகளை வெளிக்கொண்டு வர வேண்டும். மக்களுக்கு எது நன்மையோ அதை செய்வதற்காக தன்னை உருக்கி கொடுக்க வேண்டும். அப்படியொரு பயணத்தை செய்கின்றவர்கள் நிச்சயமாக ஊடகவியலாளராக பயணிக்க வேண்டிய காலம் இது. மக்களுக்காக போராடும் போது ஊடகவியலாளர்கள் அந்த விடயத்தை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மக்களுக்கு எழுச்சி ஊட்ட செய்ய வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்களை சரியாக அணிதிரட்ட வேண்டிய கடமை ஊடகவியலாளர்களுக்கு இருக்கிறது. அறம் சார்ந்து மறம் சார்ந்து பயணிக்கின்றவர்களாக காலத்தை சரியாக வழிநடத்துகின்றவர்களாக ஊடகவியலாளர்களான நாங்கள் இருக்க வேண்டும். இலத்திரனியல் ஊடகவியலாளர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை ஏனென்றால் சரியானவர்களும் இருக்கின்றார்கள். இன்று குண்டுகட்டாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனை தூக்கி சென்ற புகைப்படம் தான் இலங்கை அரசை அம்பலப்படுத்தி இருக்கிறது. அங்கு இலத்திரனியல் ஊடகவியலாளர் ஒருவர் இருந்திருக்கிறார். அங்கு ஊடகவியலாளர்கள், பெண்கள், சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனை சொல்வதற்கு எங்களுக்கான ஒரு ஊடகம் இருக்கவில்லை. தேசிய ஊடகங்களாக செயற்படுகின்றவர்

(16ஆம் பக்கம் பார்க்கவும்)

(24ஆம் பக்க தொடர்ச்சி)

ளின் கருவிகளாக இருக்கும்போது அதிகாரத்தின் கருவியாக இருக்கும்போது அங்கு மத நிந்தனையும் பிற மதத்தாருக்கு எதிரான போராட்டங்களும் பிற மதத்தாரை ஒடுக்குவதும் இருந்தே இருக்கின்றன. இவ்வாறு உலகம் முழுக்க சமயத்தின் பெயரால் மாற்று சமயத்தினர் தண்டிக்கப்பட்டதும் கொலை செய்யப்பட்டதும் துன்புறுத்தப்பட்டதும் வரலாறு. இப்படியான விடயங்களை கடந்து தான் போக வேண்டி இருக்கும். எனவே மன்னாரை பொறுத்தவரை மன்னார் மக்கள் மத்தியில் மிகவும் சூடாக இருக்கும் இந்த விடயம் ஏன் தமிழ் தேசியவாதிகளால் பேசப்பட முடியாமல் இருக்கின்றது? இரண்டு பக்கத்திலும் உள்ள வாக்கு வங்கியினை சார்ந்து இருக்கின்ற தேசியவாதிகளால் அதனை முழு முயற்சியாக பேச முடியாது. அதற்கு வெளியில் புறம்பாக வந்து நின்று தான் இந்த முயற்சியை நாங்கள் பரிசீலிக்க வேண்டும்.

தேசியத்தை கட்டி எழுப்புவது என்றால் மதங்கள், குழுக்கள், பிராந்தியங்கள் கடந்த நிலையில் நின்று தான் பேச வேண்டும். நாங்கள் இதனை பேசுவதற்கு இன்னும் எங்களை தயார் படுத்தி கொள்ளவில்லை. அந்தளவு முதிர்வு நிலையில் நாங்கள் இல்லை. இந்த நிலையில் எவ்வாறு எங்களுக்குள் தமிழ் தேசியம் கட்டமைக்கப்படும்? இதுவே இங்குள்ள பிரச்சனை. ஒரு பக்கத்தில் இலங்கையினுடைய சிங்கள ஆட்சியாளர்கள் தங்களின் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக இரண்டு கருவிகளை கொண்டிருக்கின்றார்கள். ஒரு பக்கத்தில் பௌத்தம் என்கின்ற ஒரு மதக்கருவி, மறு பக்கத்தில் இராணுவம் என்கின்ற படைக்கருவி. இந்த இரண்டையும் வைத்து கொண்டு முன் நகர முயற்சிக்கின்றார்கள். சாதாரண பௌத்த மக்கள் மத்தியில் இந்த இலங்கை அரசாங்கம் செய்கின்ற அபத்தமான பிரச்சாரத்தை நாங்கள் முழுமையாக உடைக்கலாம். உடைக்கும் போது அந்த மக்கள் எமது போராட்டத்தின் நியாயங்களை புரிந்து கொள்வார்கள்.

> நாங்கள் சிங்கள மக்களுடன் பேச வேண்டும் இங்கே போராடுவதை விட அங்கு தான் போராட்ட களங்களை திறக்க வேண்டும்

தையிட்டியில் விகாரை கட்டப்படுகின்றது முன்பிருந்த விகாரையின் இடத்தில் விகாரை கட்டப்படுகின்றதா என்றால் இல்லை. முன்பிருந்த விகாரைக்கு உரிய காணி உறுதி நயினாதீவு விகாரையினுடைய பிரதம குரு விடம் இருக்கின்றது. அவர் தான் அதற்கு உரித்தாளராக இருக்கின்றார். அந்த காணியில் அந்த விகாரை கட்டப்படவில்லை. வெளியில் ஒரு தனியார் காணியில் கட்டப்படுகின்றது. 1959 ஆம் ஆண்டு இலங்கை வரைபடத்தில் அந்த இடத்தில் ஒரு விகாரை இருந்ததாக அடையாள குறியீடு இருக்கின்றது என்று அவர்கள் சொல்கின்றார்கள். அடிப்படையில் அவர்கள் இங்கு பௌத்த விகாரைகளை கட்டுவதன் நோக்கம் வழிபாட்டுக்காகவா அல்லது ஆதிக்கத்தின் அடையாளமாகவா என்கின்ற கேள்வி வரும்போது ஆதிக்கத்தின் அடையாளமாகத் தான் என்றே பதில் இருக்க முடியும். இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் சிங்கள மக்களுடன் பேச வேண்டும். இங்கே போராடுவதை விட நாங்கள் சிங்கள மக்களுக்கு போய் சொல்ல வேண்டிய செய்தி பெரிய செய்தி. 'பிரச்சனை பௌத்தம் அல்ல. அந்த விழுமியங்கள் நாங்களும் பேண விரும்புகின்ற விழுமியங்கள். ஆனால் நீங்கள் பௌத்த விழுமியங்களையும் பெறுமானங்களையும் மீறி புத்தர் கற்பித்த கற்பித்தலையும் மீறி இன்னுமொரு அரசியல் அதிகாரத்தின் குறியீடாக இதை பயன்படுத்துகின்றீர்கள். இதற்கு எதிராக தான் நாங்கள் போராடுகின்றோம்' என்று முதலில் அவர்களுக்கு உரத்து சொல்ல வேண்டும். எங்களின் போராட்ட களங்களை இங்கு வைக்க கூடாது. அங்கு தான் திறக்க வேண்டும். அங்கு திறந்து அந்த மக்களோடு பரந்த அடிப்படையில் பேசும் போது தான் அவர்களுக்கு புரியும் இந்த தேசத்தில் என்ன நடக்கிறது என்று.

மிக அண்மையில் கூட இலங்கையினுடைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் பேசி இருந்தார். இலங்கையை பிரித்தெடுப்பதற்கு புலிகள் போராடினார்கள் எனவே தாங்கள் அதை மீட்டெடுத்தோம் என்று. இலங்கையை ஒரு மக்களுக்கு மட்டுமாக பிரித்தெடுப்பதற்கான

முயற்சிகளை முதலில் முன்னெடுத்ததே அவர்கள் தானே. 2500 ஆண்டுகளுக்கு முன்பு தனது சொந்த தேசத்தில் இருந்து சொந்த தந்தையாலே தேச பிரதிஷ்டம் செய்யப்பட்டு கடலிலே அலைய விடப்பட்ட விஜயனும் தோழர்களும் தரையை தட்டி தானே இங்கு வந்தார்கள். தரை தட்டி கரைக்கு வந்த போது இங்கு இயக்கர், நாகர் என்று இரண்டு இனங்கள் இருந்ததாக தானே பதிவு இருக்கின்றது. கௌதம புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வருகை தந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அது உண்மையாக இருந்தால் அதில் ஒருமுறை நாகதீபத்திற்கு தானே வந்தார். அது இரண்டு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்ப்பதற்காக என்று கூறப்படுகின்றது. விஜயன் வருவதற்கு முன்பே கௌதம புத்தர் வந்து இருக்கும் போது இலங்கையில் மனிதர்கள் இருந்தார்கள் தானே. நாங்கள் அவர்களை எல்லாம் தேசத்தின் மக்களாக கருதாமல் நாங்கள் அவர்களின் பரம்பரை என்பதை உணர்ந்து கொள்ளாமல் நாங்கள் என்ன செய்கின்றோம்?

நாங்கள் 2500 வருடங்களுக்கு முன்பு இங்கு வந்து குடியேறிய ஆரிய பரம்பரை என்கின்றோம். ஆகவே நாங்களே இந்த தீவின் பூர்வீக குடிமக்களாக இதுவரையில் எங்களை பிரகடனப்படுத்தவில்லை. இதுவே எங்களுக்கு இந்த தீவின் மேல் உரிமை கோருவதில் சந்தேகம் இருக்கின்றது என்று சொல்ல வருகின்றது தானே. நாங்கள் யாழ்ப்பாண வைபவமாலையையும் வேறு விடயங்களையும் வைத்து கொண்டு பேசுகின்றோமா? சில நூற்றாண்டுகளுக்கு முன் சோழர் படை எடுப்பு காலத்திலோ வேறு காலத்திலோ இலங்கைக்குள் வந்து குடியேறிய ஒரு பிற்கால தொகுதி மக்களை வைத்து கொண்டு இந்த தேசத்தின் வரலாற்றை கட்டமைக்க போகின்றோமா? 2500 வருடங்களுக்கு முன்பு தரை தட்டி இந்த தேசத்திற்குள் தன்னை கட்டமைத்தவர்கள், அதற்கு பிறகு 400, 500, 1000 ஆம் வருடங்கள் சோழர் படை எடுப்பு காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள், இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன் அன்றைய ஆட்சியாளர்களால் சட்ட முறையாக இந்த தேசத்தின் அபிவிருத்திக்காக அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட மக்களை கள்ள தோணிகள் என்று சொன்னால் இது என்ன தர்க்கம்?

தரை தட்டி வந்தவர்கள், படை எடுத்து வந்துவிட்டு திரும்பி போகாமல் இங்கு தங்கியவர்கள், ஆளும் ஆட்சியாளர்களினால் சட்ட முறையாக பதிவு பெற்று வந்து குடியமர்த்தப்பட்டு கடந்த 200 வருடங்களாக இந்த தேசத்திற்காக உழைத்து இருப்பவர்கள். யாருக்கு இந்த தேசம் சொந்தம்? யாருக்கு இந்த பாக்கியதை அதிகமாக உண்டு?

லெமூறியாக் கண்டம் என்று பேசுகின்றார்கள். கடல் கொண்ட தென்னாடு என்று பேசுகின்றார்கள். சிலவேளைகளில் அவர்கள் சொல்கின்ற அந்த கற்பனை வரைபடம் எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம். அல்லது வெறும் எடுகோளாவே இருந்துவிட்டு போகலாம். அந்த வரைபடத்தில் தென்னிந்தியாவிற்கு கீழே பெரிய ஒரு நிலப்பரப்பை அவர்கள் கீறும்போது அதனுடைய முனையாக இருப்பது இலங்கைத் தீவு மட்டும் தானே. அப்படியென்றால் அந்த லெமூறியா கண்டத்தின் அதி உயரமான நிலப்பரப்பு, கடலில் இதுவரையிலும் மூழ்காமல் இருப்பது இலங்கைத் தீவு தானே. லெமூறியா கண்டத்தினுடைய அந்த தேசம், அதாவது அந்த கண்டத்தில் வாழ்ந்த மக்களில் எஞ்சிய தொகுதியினர் தானே இந்த தீவிற்கு உரியவர்கள்? நாங்கள் எவ்வளவு பெரிய பாரம்பரியத்திற்கு உரியவர்கள். இரத்தினபுரியிலே ஒரு குகையிலே கண்டெடுக்கப்பட்ட எலும்பு கூட்டை (அதனை பலாங்கொடை மனிதன் என்று அடையாளமிட்டிருக்கிறார்கள்) விஞ்ஞான பூர்வமாக பரிசீலித்த போது அந்த எலும்பு கூட்டினது வரலாறு எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு பின்னோக்கி போகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் அவன் தானே இந்த மண்ணிற்கு சொந்தக்காரன்?

எங்களுடைய போராட்டம் வெறுமனே தமிழ் தேசியம் என்கின்ற குறியீட்டுக்கான போராட்டம் அல்ல. ஒரு இனத்தை மேலாதிக்கம் கொண்டதாக கட்டி எழுப்புவதற்கான போராட்டமும் அல்ல. ஒவ்வொரு சமூகமும் இந்த பூமிப்பந்தில் தன்னை தான் சுதந்திரமாக கட்டமைக்க வேண்டும். தனது பண்பாட்டை வாழ்வியலை இந்த பூமிப்பந்தில் தான் சுதந்திரமாக அனுபவிக்கின்ற உரிமையை கொண்டிருக்க வேண்டும். தனது பண்பாட்டை வாழ்வியலை இந்த பூமிப்பந்தில் தான் சுதந்திரமாக பிரயோகிக்கின்ற உரிமையை கொண்டிருக்க வேண்டும்

என்ற அடிப்படையில் இலங்கை தீவில் வாழ்கின்ற பல பண்பாடுகளை கொண்டவர்கள், பல தாய்மொழிகளை கொண்டவர்கள், பல வாழ்வியல் மரபுகளை கொண்டவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் சளைத்தவராக இல்லாமல் சமூகமாக தங்களை கட்டி எழுப்புவதற்கான உரிமைக்கான போராட்டம் தான் எங்களுடைய போராட்டம்.


**இந்த நாட்டில் உள்ள பிரச்சனையே பல தேசிய இனங்கள் வாழ்கின்ற தேசத்தில் எல்லா தேசிய இனங்களையும் சமமாக அனுசரித்து அனுமதித்து அவர்களை கட்டி எழுப்ப அந்த வாய்ப்பினை கொடுக்க முடியாத ஒரு அரசியல் கட்டமைப்பு தான் இங்குள்ள பிரச்சனையாக இருக்கின்றது.** பெரும்பான்மை ஜனநாயகம் என்ற தவறான கணிப்பின் பெயரால், ஜனநாயகத்தின் இருண்ட பக்கங்களின் பெயரால் ஒரு குறிப்பிட்ட தொகுதி பெரும்பான்மை மக்கள் தங்களால் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினரை தோற்றுப்போனதாக பிரகடனப்படுத்தி அவர்கள் மேல் தங்களுடைய அதிகாரத்தை பிரயோகித்து இருண்ட பக்கங்களை கொண்ட ஜனநாயகத்தின் பெயரால் தேசம் சீரழிக்கப்படுகின்றபடியால் தானே நாங்கள் இதனை ஒரு அரசியல் போராட்டமாக இன்னமும் வைத்திருக்கின்றோம். அவ்வாறு பார்க்கும்போது இந்த நாட்டின் அரசியல் மாதிரி மாற்றப்பட வேண்டுமென்றால் நாங்கள் அதற்கான வாதங்களை சரியான முறையில் கட்டமைக்க வேண்டும்.

வெறும் அரசியல் அதிகாரத்திற்கான போட்டியாக இல்லாமல் பல்வேறு பண்பாடுகள் விழுமியங்களை கொண்ட மக்கள் பரஸ்பரம் புரிதலுடன் இந்த தீவில் வாழ்கின்ற உரிமை கொண்டவர்கள் என்பதனை பௌத்த சிங்கள மக்களுக்கும் பௌத்த துறவிகளுக்கும் சொல்லக் கூடிய அளவிற்கு நாங்கள் எங்களுடைய போராட்டத்தை விரிவாக்க வேண்டும். இது அரசியல் தளங்களுக்கு அப்பால் விரிவாக்கப்பட வேண்டும். வெறுமனே அரசியல் அதிகாரம் என்ற கோசத்தை மட்டும் வைத்துக்கொண்டு இதை செய்வோமாக இருந்தால் நாங்கள் வெல்லப் போவதில்லை. ஏனென்றால் எங்களுடைய அரசியல் அந்தளவுக்கு மிகவும் பலவீனமானது. மிகவும் கூறுபட்டு போயிருக்கின்றது. எந்தவித விழுமியங்கள் நியமங்களும் இல்லாமல் சிதைந்து போயிருக்கின்றது. இந்த நிலையில் இருந்து நாங்கள் மாற வேண்டும்.

எங்களுடைய போராட்டம் இன்னுமொரு திசையில் புதிய வழிமுறைகளை தேட வேண்டும். கால நீட்சி என்பது மிகவும் ஆபத்தானது. கால நீட்சியில் கரைந்து போகின்ற வாய்ப்புகள் மிக அதிகம். இந்த கால நீட்சியில் கரைந்து போவதிலிருந்து நாங்கள் வேகமாக போராட வேண்டுமென்றால் தீர்வுகள் எதுவும் வானத்தில் இருந்து வராது. ஐரோப்பாவிலும் இருந்து வராது. ஐ.நாவிலும் இருந்து வராது. அயல்நாட்டிலும் இருந்து வராது. நாங்கள் தான் கண்டறிய வேண்டும். எதனை எவ்வாறு கண்டறிய வேண்டும் என்பதற்கு நாங்கள் அமர்ந்து பேச வேண்டும். நாங்கள் எங்களுடைய கட்சி அடையாளங்கள், குறியீடுகள், பழைய குரோதங்கள், பய பிராந்திகள் எல்லாவற்றுக்கும் அப்பால் வந்திருந்து பேச வேண்டும். அப்படி திறந்த மனதுடன் பேசுகின்ற ஒரு களத்தை நாங்கள் தான் திறக்க வேண்டும்.

யாரோ ஒருவர் கூப்பிட்டு எங்களை எல்லாம் வந்திருந்து கதையுங்கள் என்று புது வழி காட்டுகின்ற தேவையில்லை. அந்த சூழலைக் கூட அனுமதிக்காமல் நாங்களே இருந்து பேச வேண்டும். எங்களுடைய வறட்டு பிடிவாதங்களையும் வறட்டு சித்தார்த்தங்களையும் விட்டு விட்டு நாங்கள் கூடி இருந்து பேச வேண்டும். ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அதற்கு எதிராக போராடுகின்ற அந்த அறம் சார்ந்த போராட்டமாக தான் எங்களுடைய போராட்டம் கட்டமைக்கப்பட வேண்டும். எல்லா மக்களும் எல்லா சமூகங்களும் தாங்கள் நம்புகின்ற விடயங்களையும் தாங்கள் வாழ்வியலில் பிரயோகிக்கின்ற விடயங்களையும் ஏனைய மக்களும் எந்தவிதத்திலும் இடையூறு இல்லாமல் பிரயோகிக்கின்ற உரிமையை கொண்டவர்கள் என்ற வகையில் அதனை நிலைநிறுத்துவதாக எங்களுடைய போராட்டம் இருக்க வேண்டும். எங்களுடைய தேசத்தின் போராட்டம் அவ்வாறு தான் இருக்க வேண்டும். நான் நினைக்கின்றேன் நாங்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது. காலம் நீட்சியடைந்து கொண்டிருக்கின்றது. ஆனால் நாங்கள் இன்னமும் இருட்டறையினுள் ஒரு கறுப்பு பூனையை தேடிக் கொண்டே இருக்கின்றோம்.

# மதம் தேசிய அடையாளங்களில் ஒன்றாக இருக்க முடியாது



■ செல்வின்

தமிழ் மக்களுடைய தேசிய விடுதலை போராட்டத்தில் மதம் தேசிய அடையாளங்களில் ஒன்றாக இருக்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாக சொல்ல வேண்டும். நாங்கள் மதங்களால் கூறுபடுத்தப்படுகின்றோம். தமிழ் தேசியம் என்பது மதங்களை கடந்தது. எனவே தமிழ் தேசியத்தோடு மதங்களை இணைத்து பேசுவது மதங்களை குறியீடாக பயன்படுத்துவது என்பவை எல்லாம் தவறான அணுகுமுறைகளாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அவற்றை நாங்கள் தூர வைக்க வேண்டும்.

மதங்கள் மதங்களாக இருந்து கொள்ளட்டும். தமிழ் தேசியம் என்பது இன்னுமொன்று. சிங்கள மக்களும் ஒரு தேசியம், இஸ்லாமியர்களும் ஒரு தேசியம், மலையக மக்கள் தாங்களும் ஒரு தேசியம் என்று கோரி இருக்கிறார்கள். கட்டாயம் நாங்கள் அந்த தேசியங்களை ஏற்றுக் கொள்வோம். அந்தவகையில் அவர்களுடைய உரிமைகளை எல்லாம் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். எங்களுடைய தேசிய விடுதலைக்கான அல்லது இலங்கையினுடைய தேசிய இனப்பிரச்சனை என்று சொல்லப்படுவது ஒரு தேசிய பிரச்சனை. அது தமிழ் மக்களுக்கு மட்டும் இருக்கும் பிரச்சனை அல்ல. ஒட்டுமொத்த இலங்கைத் தீவின் பிரச்சனை.

மொழிகளாலும், பொருளாதாரத்தாலும், வாழ்வியலாலும், வாழ்நிலத்தாலும் வேறுபட்ட பல இன குழும மக்கள் தங்களை தேசிய இனங்களாக அடையாளம் காண விரும்புகின்றார்கள். ஏனைய இனங்களின் மேலாதிக்கம், பொருளாதார மேலாதிக்கம், அரசியல் மேலாதிக்கம், பண்பாட்டு மேலாதிக்கம் போன்றவற்றில் இருந்து தங்களை பாதுகாத்து தங்களையும் அவர்களுக்கு சமமாக நிலை நிறுத்த விரும்புகின்றார்கள். அதனை நாங்கள் வெளிப்படையாக பேச வேண்டும். வெறும் தமிழ் தேசியம் என்று எங்களுடையதை மட்டும் தான் பிரச்சனையாக அதனை நாங்கள் குறுக்க கூடாது. இந்த தமிழ் தேசிய விடுதலை போராட்டம் என்கின்ற விடயத்தில் நாங்கள் நீண்ட தூரம் கருத்தியலாக பயணிக்க வேண்டி இருக்கின்றது. மதங்களால் கூறுபடுகின்றோம். சாதிகளால் கூறுபடுகின்றோம். ஊர்களால் கூறுபடுகின்றோம். பிராந்தியங்களால் கூறுபடுகின்றோம். மாகாணங்களால் கூறுபடுகின்றோம். இவ்வாறு பல அடையாளங்களால் பலவிதமான குறியீடுகளால் நாங்கள் கூறுபடுத்தப்பட்டு கொண்டிருக்கும் போது எங்களுக்குள் தேசியம் வளராது.

தேசியம் என்பதற்கு பின்னால் உள்ளது ஒரு வெறி அல்ல, ஒரு தேசம் பற்றிய கட்டுமானம். அது வெறுமனே வாய்மொழி சொல் அல்ல. ஆனால் நாங்கள் அதனை வெறுமனே வாயிலே உச்சரிக்கின்ற விடயமாக யோசிக்கின்றோம். அதை சொன்னால் சரி என்று நினைக்கின்றோம். தேசத்தை கட்டி எழுப்புவது தான் தேசியம். தேசத்தை கட்டி எழுப்பாமல் தேசியம் பேசுகின்றோம் நாம். அந்த போலித் தேசியத்தை முன்னெடுப்பதற்காக இனக்குழுமங்களை மதக் குழுமங்களோடு சேர்த்துப் பார்க்கிறோம். மத மேலாதிக்க உணர்வுகளை அல்லது மதப் பற்றுக்களை பிரயோகிக்க முயற்சிக்கின்றோம்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் கோவிலின் பழைய வீதியிலுள்ள தலைவாயில் வளைவு கட்டப்பட்டது, சேதப்படுத்தப்பட்டது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஒரு வழக்கு கூட இருக்கின்றது. திருக்கேதீஸ்வரம், மடு எல்லாம் சைவ மக்களுக்கும் கிறிஸ்தவ கத்தோலிக்க மக்களுக்கும் முதன்மையான பெறுமதி மிக்க தலங்கள். தேவாரத்தில் பாடப்பெற்ற தலம் என்று சொல்லப்படுகின்ற திருக்கேதீஸ்வரம், மடு அன்னை குடி கொண்டிருக்கின்ற மன்னார் மாவட்டம் என்று பல பதிவுகள் இருக்கின்றன. மதங்கள் ஆட்சியாளர்க

(21 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 28.06.2023 அன்று வெளியிடப்பட்டது.